விலை
280/=

# வாசல்

கவிதைக்கான காலாண்டு இதழ்

வாசல் : 1 | சித்திரை - ஆனி 2023 | வருகை : 1



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலக கவிஞர்களை ஒருங்கிணைக்கும் வாசல்

## முதலாவது கவிதை இதழை அலங்கரிக்கும் கவிஞர்கள்

1. தாமரைத்தீவான்
2. மதிவதனி
3. செ.ஞானராசா
4. ஜே.பிரோஸ்கான்
5. திருமலையாள்
6. ஏ.எம்.கஸ்புள்ளா
7. பாரதி மைந்தன்
8. யோகானந்தன்
9. திருமலை சுந்தா
10. ரோஹினா மஹரூப்
11. நந்தவனம் சந்திரசேகரன்
12. தில்லைநாதன் பவித்ரன்
13. கவிமணி அம்.கௌரிதாசன்
14. சம்பூர் வதனரூபன்
15. ஜெயினுலாப்தீன் சபினா
16. மு.யாழவன்
17. மாயன்
18. கொட்டிய ஆரன்
19. சு.தில்ஹாஷா
20. இ.ரஜீந்திரமூர்த்தி,
21. கவிச்சுடர் சிவரமணி
22. மல்லிகைவாணன்
23. சேனையூர் அச்சுதன்
24. காரையன் கதன்
25. மதிபாலசிங்கம்
26. சிவஸ்ரீ அ.அரசரெத்தினம்
27. செம்பாட்டுச்சிறுபீலியான்
28. லதா கந்தையா
29. பாலகிருஷ்ணன் ஹம்சபாலன்
30. சேனையூர் இரத்தினசிங்கம்
31. நிலாவெளியூர் கெஜ.தர்மா.
32. சுவிஸ் சுரேஷ்
33. த.சிதம்பரப்பிள்ளை
34. சரவணபவானந்தம்
35. ஜெயினுலாப்தீன் சபினா
36. சேனையூர் நவரெத்தினராஜா
37. தெ.கரிதரன்
38. ஹலால்தீன்
39. புடவைக்கட்டு சமிரா
40. தில்ஷாத் பானு
41. சிவானந்தம்
42. சுஜந்தினி யுவராஜா
43. பிரிதிவிராஜ் லோஜி
44. பஸ்மிலா சிபான்
45. இப்பத் ஸாஹிரா
46. ஷிறோமி ரவீந்திரராஜா
47. மு.கா.முகம்மது அஸ்வர்
48. ச.திருச்செந்தூரன்

**களம்**

49. யதுஷா செல்வரெட்ணம்
50. திவானிகா யோகரஞ்சன்
51. தயாணி உதயசங்கர்
52. சந்தியா ராம்குமார்
53. சன்சனா பெற்றிக் ஜெராட்
54. சிராணி ஶ்ரீஸ்கந்தராஜா
55. மந்தூரி யோகநாதன்
56. சஹானா ஜபநேசன்
57. மதுஷானி லோகநாதன்
58. செ.கிறிஸ்டினா
59. க.மதுஷா
60. லத்திகா ஜெயபாலன்
61. பி.தீப்திகா
62. சதுர்ஷிகா வேலுமணி
63. மகேந்திரன் ஹிதுர்சனா
63. பி.டிதுர்சி
64. எம்.எப்.மிஹ்னாஸ் சிபா



**அட்டைப்படம் : கே.சிறிதரன்**

**மூலமும் பெயர்ப்பும் : மாயன்**

**வடிவமைப்பு: மு.ஷ.மு.மஸாஹிர்**

வேற்றுமொழி வார்த்தைகள் கலந்துள்ள கவிதைகளின் தலைப்புக்கள், வரிகள் என்பவற்றை தமிழ்ப்படுத்தவும், கவிதைகளை செவ்வைப்படுத்தவும் பிரதம ஆசிரியருக்கு உரிமையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசல் நோக்கு - 01

அனைவரையும் சந்திப்பதில் பேருவகை கொள்கின்றோம். இலக்கியம் வரண்டு விட்டது என்று ஒரு சாராரும், நாம் செய்வது மாத்திரம் தான் இலக்கியம் என்று இன்னொரு சாராரும், காசு இருப்பவர்கள் எல்லாரும் இலக்கியம் செய்யலாம் என்று மற்றொரு சாராரும் இலக்கியத்தின் ஏக விநியோகஸ்தர்களாக திருமலை உள்ளிட்ட இலங்கையின் அனைத்து பாகங்களிலும் மாறியிருப்பதைக்கண்டு பெரும் கவலையடைந்தோம்.

ஒரு சாராரால் எழுதப்படுகின்ற வெற்று வரிகள் அனைத்தும் மாபெரும் கவிதைகளாக கொண்டாடப்பட்டு விருதுகள் வழங்கப்படுகின்ற இக்காலத்தில் கவிதை தொடர்பில் இளம் தலைமுறையினருக்கு சரியான அருட்டுணர்வு ஏற்படவில்லை.

மனிதர்களின் உள ஆற்றுப்படுத்தலின் மிக முக்கியமான இலக்கிய வடிவமான கவிதை ஏனைய இலக்கிய வடிவங்களை விட மிக முக்கியமான கலைப்படைப்பாகும். தொடர்பாடலின் மிக அடிப்படையான கூறான அனுப்புரான எழுத்தாளன் தனது உளநெருக்கடிக்கு தீர்வாக கவிதை என்ற வடிவத்தினூடாக விடுதலை பெற முயற்சிக்கின்றான். அதனை வாசிக்கின்ற பெறுநரான வாசகன் அவனது உளநெருக்கடிக்கு தீர்வாக கவிதையை நாடுகின்றான்.

அந்த வகையில் நோக்கும் பொழுது, கவிதை மனிதர்களிடையே காணப்படும் உள நெருக்கடிக்கு தீர்வாக அமைந்து அக முரண்பாட்டினை நீக்குவதன் மூலம் மனிதர்களிடையே நிகழும் முரண்பாட்டிற்கு தீர்வாக அமைந்து தேசிய ரீதியில் முரண்பாடற்ற சமூகமொன்றை உருவாக்கி ஒட்டுமொத்த அபிவிருத்தியில் பங்களிப்பு செய்யும் வீரியமும், உணர்வு ரீதியாக அனைத்து மக்களையும் ஒரு இலக்கிற்காக ஒருங்கிணைக்கின்ற பலமும் கவிதைக்குண்டு. இந்த யதார்த்தம் தான் வரலாறு நெடுகிலும் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது.



இத்தகைய தூரநோக்கினை சிரமேற்கொண்டு வெளிவருகின்ற "வாசல்" உலக கவிஞர்களை ஒரு தளத்திற்குள் கொண்டுவரும் முயற்சினையும், மாணவர்களிற்கு களம் வழங்கும் வகையில் "களம்" பகுதியினையும் உருவாக்கி சிறந்த கவிஞர்களை உருவாக்க பணியாற்றுகின்றது முரண்பாடுகளை மறந்து வாசல் தேடி வருகை தந்து அனைவரும் ஒன்றாய் சங்கமிப்போம் வாரீர்...

**பிரதம ஆசிரியர் – ச. திருச்செந்தூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் என்ன தாமதம்..?

மதிவதனி
ஆசிரியர்
தி/விபுலானந்தா கல்லூரி

வானவில்லின் வர்ண அழகை
ஒன்றாய் சேர்த்தாற்போல
இனிமையான உணர்வுகளும்
சுவையான மனநிறைவும் சேர
வார்த்தைகள் கூட
சில சமயம்
வாயடைத்துப்போய் நிற்கும்
என்
தனிமையின் கேள்விகளுக்கு
எல்லாம்
விடையாக வந்து..
உன் பார்வைக்காகவே
பரிதவிக்கச்செய்கிறாய்..

காலங்கள் நிற்பதில்லை
எனத்தெரிந்தும்
மாடி வீட்டு நிலாவாக
மழைக்கு ஒதுங்கும் போதெல்லாம்
காத்திருக்கும் நேரம்
மெதுவாக நகரும்
சோகத்தில் நகராது - ஆனால்
மகிழ்ச்சியில் போவதே தெரியாது..
அதனால் வந்து விடு
இன்னும் என்ன தாமதம்..?

என்மனம் எதைப்பற்றி
அடிக்கடி சிந்திக்கிறதோ
அதைச்செய்யவே உள்மனம்
வழிகாட்டுகிறது.
ஆகவே வந்து விடு..
இன்னும் ஏன் தாமதம்..?

தவிர்க்க முடியதாத கனவொன்றில்
திடுக்கிட்டு திறக்குமென் மூடிய
விழிகள்..
சுற்றிலும் பார்த்து சுயத்துக்குவந்து
அமைதி தேடும் என் மனம்
ஆனாலும்
தாமதத்தை தாங்கவென்றால்
தனிமனசு ஒன்று வேணும்..
இனியும் முடியாது.
வந்து விடு
இன்னும் ஏன் தாமதம்..?

# ஏன் பிறந்தோம்?

திருமலையாள்

கண்களில் நீரில்லை
அழுவதற்கும் தெம்பில்லை

கேட்பதற்கு நிறைய உண்டு
வேண்டியது
வேண்டியவரிடமிருந்து
கிடைத்ததில்லை.

அன்பை கொடுத்து
அன்பை பெறுவதற்கு
ஆசைகள் நிறைய உண்டு

விம்மி விம்மி நிற்கிறோம்
விடை தெரியா பிள்ளைகளாய்

தேவையென்று வரும் போது
அடி மனதிலிருந்து
அழைக்கவில்லை
கூடி வரும் காலமெல்லாம்
கூடவே இருந்ததில்லை

மறு ஜென்மம் ஒன்றிருந்தால்
மறுபடியும் பிறப்போம்...!
ஏக்கங்களற்ற வாழ்க்கையில்
இன்பம் பல பெற்றிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்திகிலின் சத்தம்

ஜே.பிரோஸ்கான்

அந்த இரவை
பெருந்திகிலின் சத்தமொன்று
ஆளுகிறது
அதிலிருந்து மீள முடியா
பரிதவிப்போடு
இருளின் வாசனையை
பிடித்து கொள்கிறது
சத்தம்.

அவளது இரவின் கடலென்பதால்
மிருதுத்தன்மையை
பிரதி செய்ய கேட்கிறது.
மறுத்து விடும் உன் சத்தத்தின்
சொற்கள்
நுண் நளினமிழந்திருந்தது.

ஆன்மாவை ருசிக்கும் இரவில்
அறையை விட்டு தெருவுக்கு
வருகின்ற
சப்தம்,
தூக்கத்தை தின்னும்
அந்த நீலச்சுவை
அங்குமிங்கும் மஞ்சள் சேதிகளை
பரப்பி விட்டு நகர்கிறது.

நிராதரவான இரவை
மென் நீல நிறத்தால்
பூசிக்கொள்கிறாய்,
சூட்சுமத்தால் நிறைந்த நீ.

இப்போது துயரின் நீர்மை
ஒரு பேராறு போல
என் உடலிலிருந்து
வெளியேறுகிறது,
உன் சாயையயின்றி
தொடரும் சப்தத்தின்
நனைவித்தல்
இரட்சிப்பென நீள்கிறது.

பின்னர்
வெண் புகை இரவைச்சூழ
விடியல் ஆதர்சம் ததும்ப
ஒரு ஆதிச்சுடரை
பிரகாசிக்க செய்துவிட்டிருந்தது.

# ஆதிக்கம்

செ.ஞானராசா
அன்புவழிபுரம்

சாதிக்க வந்ததாய் சாட்சி கூறி
சட்டத்தை உடைத்து வைத்தவரே
ஆதிக்கம் செலுத்தி ஆட்டிப்படைத்து
ஆடினர் தேடினர் ஓடியொழிந்தார்

வாதிப்பார் வாய்ச்சொல் வீரர்களாய்
வசதிக்காய் வாய்ப்புத்தேடுவார்
போதிப்பது பொதுநீதி போலிருக்கும்
பொறுப்பு கூறாமல் தப்பிப்பார்

வேலியே பயிரை மேயும் நிலை
வேலையில்லா வேலையின் சாயல்
போலியாய் வாழும் பொய்வேடம்
பொதுமக்களை சுரண்டி வாழும்

உயர்வு தாழ்வு உருவாக்கி வைத்து
உயரப்பார்க்கும் உதவாக்கரை
வியர்வை சிந்தா வியக்கும் பதவியை
விரும்பிப்பெற்று சுகம் காண்பார்

தேதியை குறித்து மீதியை வைத்து
தேவைகருதி சேர்ந்து கொள்வார்
சேதி விளம்பரம் சேராது கலவரம்
சேவையை தேவைக்கு ஏற்ப செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில்

ஏ.எம்.கஸ்புள்ளா

காகமும் கறுப்புத்தான்
கறுப்பு சிலருக்கு
பிடித்த நிறம்
பலருக்கு பிடிக்காத வரம்

செருப்பில் கறுப்பை
அணிவார்கள்
பிடியாத போதும்
அதில் பிடிவாதமாய் இருப்பார்கள்.

தேவையின் நிமித்தம்
கசப்பும் இனிக்கிறது

கொள்ளிகள் இருந்தாலும்
எரிவதற்கு சருகுகள்
தேவையானால் தேடத்தான்
வேண்டும்
படைப்பில் யாருமே
வெறுக்கப்பட்டதில்லை
ஒருவரை உயர்த்தி
இன்னொருவரை
தாழ்த்தி பார்க்கின்ற
குணம் அந்த காகத்திடம்
இருந்ததில்லை

பாத்திரமேந்தி வாசல் படி
வந்தவனிடம் கேட்டுப்பார்
வாய்கள் அழாமல்
இந்த பாத்திரங்கள்
கனத்ததில்லை என
பதில் சொல்வான்

காகம் கறுப்புத்தான்
கற்றுத்தருவதில்
அது சிறப்புதான்
உண்ணும் போது
உறவை பிரிந்ததில்லை
சூழல் பிராணி
சுத்தப்படுத்துதலில்
இத்தனைக்கும்
நம்மை விட
அறிவில் குறைந்ததென
சொல்லி
சந்தோசப்படுகிறோம்

# அக்கினிப்பார்வை

அக்கினி நிறைந்த உலகில்
தீப்பறவையாய்
சிறகசைத்து பறக்கின்றேன்

தீயை நோக்கிய
என் பயணத்தின்
நீட்சியை கண்களில்
சுமந்து செல்கிறேன்

நெருப்பு நாட்களை
விழுங்கியபடி
காலக்கரியை துப்புகிறேன்
தாகம் மட்டும் அடங்கவில்லை
என் ஆத்மராகம்
இசைவேள்வி செய்கிறது

சுதந்திரம் கிடைத்தது
சுகம் மட்டும்
இதுவரை கிடைக்கவில்லை

பழத்தில் உறங்கும்
பெருவிருட்சமாய்
இலட்சியங்கள்
உறங்கி கொள்கின்றன...

யோகானந்தன்
(சம்பூர் தாஸன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மொழியே

பாரதி மைந்தன் (அ.கிளைம்சென்)
முல்லைத்தீவு

தமிழே அமுதே தரணியின் தாயே
அமிழ்தம் பொழியும் அன்னையும் நீயே
வீரம் நிறைந்த விடியலின் வடிவே
உரமாய் வந்தாய் உணர்வில் நீயே
புனிதம் நிறைந்த பூமகள் உனையே
கனிவாய் வணங்கி காப்பேன் தாயே

மண்ணில் என்றும் மகிமை நீயே
விண்ணே வியக்கும் விடியலின் தாயே
உன்னை வணங்கினேன் உவகையில் நானே
அன்பாய் காப்பாய் அன்னை நீயே
அகரம் சொல்லி அணைத்திடும் அழகே
புகழ்ந்தே நின்றேன் புவியில் உன்னையே

காப்பியம் சொல்லிடும் காவியம் நீயே
மூப்பாய் உதித்த முதன்மையும் நீயே
கம்பன் பாடிய கவியின் அழகே
வம்சம் காத்த வள்ளலும் நீயே
அன்பை வரியில் அழகாய் ஊட்டும்
என்றன் தாயே எழிலும் நீயே

பண்டிதராசர் படைத்தே தந்த
பண்பான நூல்களை பாரில் கொண்டு
வித்தாய் விளங்கும் விந்தை மொழி
நித்தம் வாழ்வில் நிறைந்த எங்கள்
அன்பு கொண்ட அன்னை மொழி
என்றும் நீயே எங்கள் மொழி



# பொங்கிட

தாமரைத்தீவான்
(சுவைப்போன்)

சங்கை தூக்கடா
பழந்தமிழை முழக்கடா!
எங்கும் ஒலிக்கவே - விண்
இடி முழக்கதாய் !

செவிட்டு காதெலாம் -
நலம்
திறந்து கொள்ளவே!
கவிழ்ந்த பெருமழை -
நிலம்
கரைத்து மகிழவே !

களைகள் சாகவே - தமிழ்
கண்ணில் ஒளிரவே,
பிழைகள் அற்றுமே
என்றும்
பிழைத்திருக்கவே!

தமிழ் அமுதினை - வாய்
நா
தாம் சுவைத்திட,
எமது வாழ்வினை -
புவிகண் டின்பம்
பொக்கிட (சங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜங்கள் கனவாகிறது..!

ரோஹினா மஹரூப்

விழிகளை மூடாத
ஒரு வெறிச்சோடிய கனவுக்குள்
மெல்ல நுழைகிறேன்..

அதில் அழகழகாய் நானும்
நீயும் அசைபோடுகிறோம்
ஓர் அலைவரிசையில்...

விதண்டா வாதங்கள்
சூடுபிடிக்கும்
வினைத்திறனான காதலின்
சமுத்திரத்தில் மெல்ல மெல்ல
மூழ்கி கொள்கிறோம்...

எதுகை மோனைகள் என்றும்
இலக்கியப்பிழைகள் என்றும்
நமக்கான ஹைக்கூக்கள்
கருக்கொள்கின்றன...

ஒரு நீண்ட சரித்திரத்தின்
முதல் சில பக்கங்களை
உனக்காக நானும்
எனக்காக நீயும் எழுதி
கொள்கிறோம்...
சமூகத்தின் மேடு பள்ளங்கள்
நம் தூரங்களில் அதிக
ஆதிக்கத்தை செலுத்த
பார்க்கின்றது...

கால ஓட்டத்தின் சுழிகளில்
மாட்டிக்கொண்ட மயிலிறகாய்
மெதுவாக எம் உணர்வுகள்
பிறளத்தொடங்குகின்றன...

# காலங்கள்

திருமலை சுந்தா

நிகழ்காலத்தை உரைத்து
கரைத்து கோப்பையில் ஊற்றி
வாயில் வைத்த போது
இறந்த காலமானது
கோபத்தில் கத்தியது
அம்மா எப்படி என்றார்
ருசியை சோதித்த போது
எதிர்காலம் சிரித்தது
வாசலும் திறந்திருந்தது
பூனை காலடியை நக்கியது
மழை நீரில் கழுவப்பட்டிருந்த
சிரட்டையில் எதிர்ப்பார்ப்பு
குந்திக்கொண்டது
பூனையின் வாய் சிறிது
நேரத்தில் ஏசியது
பாய்ந்து வந்த எதிர்காலமானது
பூனையை தாங்க
நாவறண்ட நாக்கும்
அணைப்பில்லாத உடலும்
கட்டி அணைக்க...



நினைவுகள் கொஞ்சம் எஞ்சி நிற்க
ஊசலாடும் மனங்களில்
காவியமான
நானும் நீயும் தனித்தனி
தீவுகள் ஆகிறோம்...

விழிகளை மூடாத ஒரு
வெறிச்சோடிய
கனவுக்குள் மீண்டும் நான் நுழைந்து
கொள்கிறேன்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்காக ஒரு கவிதை

நந்தவனம் சந்திரசேகரன்
தமிழ்நாடு

கடவுளுக்காக ஒரு கவிதை எழுதினேன்
சாத்தான்கள் பறித்துக்கொண்டன

கடவுளை மட்டுமே புகழப்படுவதால்
சாத்தான்களுக்கு பெருங்கோபம்

கவிதையில் கடவுள் மயங்குவாரா
என்பது தெரியாது
சாத்தான்கள் கும்மாளமிடுகின்றன

எல்லா வழிபாடுகளும்
கடவுளுக்காகவே இருப்பதாலேயே
சாத்தான்கள் வழிமறிக்கின்றன

கடவுள் நல்லவர் என்று
அழகிய முகத்துடனும்
சாத்தான்கள் தீயசக்திகள் என்று
கோரமுகத்துடனும்
சித்தரிக்கப்பட்டிருப்பதால்
சாத்தான்கள் கொந்தளிப்பதும்
நியாயம்தானே...!

கடவுளைப்போல வேடமிட்டுக்கொண்ட
சாத்தான்களின் லீலைகளைக்கண்டும்
கடவுள் சிரித்துக்கொண்டேதான்
இருக்கிறார்

கடவுளை நம்பவேண்டும் என்ற
கட்டாயம் இல்லை என்றாலும்
சாத்தான்களிடத்திலிருந்து தப்பிக்க
உச்சரிக்கத்தான் வேண்டியிருக்கிறது
ஓம் நமச்சிவாயா... ஓம் நமச்சிவாயா...



# ஏமாந்து போகிறேன்

கவிச்சுடர் சிவரமணி

இறகு இருப்பதாய் எண்ணி
அண்டவெளியில் சுற்றுகிறேன்
மீளெழும்பலில் நேசித்த
மேகக்கூட்டம் சல்லாபிக்க
தொடங்கின

இருண்ட நேரம் மருண்டு
போனேன்
வாயைப்பிழந்த சர்ப்பம்
ஒன்று கருமுகிலாய்
ஒதுங்கி விழுந்தேன்
விழுந்த இடமோ கிளை
ஒடிந்த மரம்

அடி தேடிய கிருஷ்ணன்
காணாமல் போன நேரம்
முடி தொட நினைத்து
பிரமனும் கரைகிறான்
காற்றோடு தாங்கிய மரமோ
பட்டதினாலே
சிறு உயிர்ப்பில் உயிரணு
அதனுள்ளும்
அதையே பற்றி கனவில்
எழும்ப
கனத்த மழையில்
ஏமாந்துபோகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையை எழுதல்.....

– தில்லைநாதன் பவித்ரன் –

தன்னை எழுதாததால்
மழை என் மீது
கோபித்துக்கொள்கின்றது
இப்போதெல்லாம்
என் முற்றத்தை
அது நனைப்பதில்லை

மழையின் கோபத்தால்
எனக்கு
குடையோ அல்லது மழை அங்கியோ
தேவைப்படுவதுமில்லை

மழை வேண்டுமென
நான் எதிர்ப்பார்க்கின்ற போது
மழைக்கான அழகிய கவிதை
என்னிடமிருக்கும்
ஆனால்
அப்போதெல்லாம் மழை வருவதில்லை

மழையின் மீது எனக்கு கோபமாயிருக்கும்
அதன் ஏமாற்றம்
என்னை வதைக்கும்
அதன் துரோகத்தை
நான் ஒரு போதும் மன்னிப்பதில்லை

நான் ஏன்
மழையை எழுத வேண்டும்
மழையை எழுத ஆயிரம் கவிஞர்கள்
இருக்கிறார்களே
அல்லது
மழையை எழுதுவதால் ஆயிரம் கவிஞர்கள்
பிறக்கிறார்களே...

இருந்தும்
மழை ஒரு பிடிவாதக்காரி
என்னை கவிஞனாக்கியே தீர
இப்போதெல்லாம் அடிக்கடி பெய்கிறது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்!



நாமென்ற தனியுடைமை அகலுமானால்
நாமென்ற பொதுவுடைமை மலருமானால்
கோனாட்சி கோடாமல் கிடைக்குமானால்
கொத்தடிமை நிலைமுற்றாய் மறையுமானால்
வானமழை பொய்க்காமல் பொழியுமானால்
வயல்நிலங்கள் சால்புடனே விளையுமானால்
தேனாறும் பாலாறும் ஓடுமானால்
தேசமெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்!

பெற்றிட்ட தாயவளை துதிப்போமானால்
பிறந்தபொன் நாட்டினைநாம் மதிப்போமானால்
கற்றபடி கல்விவழி நிற்போமானால்
களவு பொய்யை புறந்தள்ளி வைப்போமானால்
மற்றவரும் மனிதரென்று நினைப்போமானால்
மனம்மகிழ இனியமொழி உரைப்போமானால்
பற்றுடனே பணிகளினை புரிவோமானால்
பாரெல்லாம் தாயகமாய் மாற்றங்காணும்!

ஏழ்மைமிகு கன்னியர்கள் வாழ்வுகண்டால்
எம்மிளைஞர் சீதனத்தை எதிர்த்து நின்றால்
கால்போன போக்கினிலே மனம் போகாமல்
காசுக்காய் பலகட்சி தனைத்தாவாமல்
வாழ்வுக்கு வரம்பிட்டு வாழ்வோர் கூட்டம்
வாய்மைக்கு வழிவிட்டு வாழ்ந்தால் ஏற்றம்
தாழ்வுயர்வு இல்லாத சமத்துவத்தால்
தாரணியெம் தாயகமாய் மாற்றங்காணும்!

வல்லரசால் போர்முறைகள் ஒடுங்குமானால்
வன்முறைகள் முற்றாக முடங்குமானால்
கொல்லுகின்ற சிந்தனைகள் அழியுமானால்
கொலை, களவு, வன்புணர்வு ஒழியுமானால்
அல்லல்தரும் புயற்காற்று, பூகம்பங்கள்
அதிர்ச்சிதரும் மண்சரிவு அனர்த்தமெல்லாம்
இல்லாமல் அனைவருமே சிரித்திருந்தால்
இத்தரணி தாயகமாய் மாற்றங்காணும்!

**கலாபூஷணம்
கவிமணி அம். கௌரிதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணிப்பூக்களிடம்
களவாடிய வண்ணங்களை
வீசி அந்திவானில் அள்ளிட
காட்டுச்சிறுக்கியை சபித்தன
மேகங்கள்.
அந்தி பீச்சிய மஞ்சள்
வழிய போதையிழந்த
அலுமினியக்குடுவைகளை
சேகரிக்கும்
ஏழைப்பொறுக்கியின் கால்கள்
போதையிலிருந்தன
விடியலில் கலவி நாய்களின்
விந்துச்சிதறலில் சறுக்கி
மாண்டது மதி.
குருட்டு வவ்வால்கள் உருட்டிய
கற்பகதரு முலைகள் பிய்ந்து
விழுந்து நசுங்கிட பேரிடியில்
கலைந்தது
நிர்வாண இரவின் கனவு.

# காலத்துள் தொலைதல்

சம்பூர் வதனரூபன்

பனிக்குழந்தைகளின்
மூத்திரத்தில் தோய்ந்தது
அதிகாலை.
வடை ருசியில் பாட்டிகளின்
பின்னே அலைந்தன
காக்கைகள்.
தனித்தனி சுவடுகளில்
மூட்டைகளை சுமந்து அவரவர்
வண்டிகள் நகர்கின்றன.
தசாப்தமொன்றின்
செரிமானமில்லா கக்கலின்
நரகலென மீந்து
வட்டத்துள் சதுரங்களையும்
வெளிமுழுவதும்
வட்டச்சிதறலாயும்
இருப்பு நீண்டு
அர்த்தமற்றதாக கழிகிறது.
காலத்தின் அசிங்கங்களுள்ளே
எவையும் அரிகண்டமாயிராது.
ஏர்க்காட்டு நிலப்புழுவுக்கு
பரிட்சயமானதே
சுணையற்றிருத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரமாகி மருந்தானேன்!

ஜெயினுலாப்தீன் சபினா

அனைத்து
உயிரினங்களையும்
ஆனந்தமாகவே தன்னில்
இயற்கை அன்னையவள்
ஈசனின் உத்தரவுடன் மனிதா
உனக்காகவே ஏற்றாளே!
ஊதாரித்தனம் குடிகொண்ட
எக்களித்த உன் மனது
ஏளனம் கொண்டிங்கே
ஐயத்துடன் எனையே
ஒரு கணமே சிந்தனையின்றி
ஓர்வாள் கொண்டிங்கே
ஔடதம் தரும் எனையே
அழிக்க நினைத்ததேனோ!

அன்னையும் நான் இங்கே
ஆறறிவு கொண்ட உனையே
இகுனையுடன் நாளும் நீ
ஈடு கொடுக்காத அளவில்
உன் ஆணவம் அழிப்பேனே!
ஊக்கத்துடன் இங்கே
என்னில் நானே
ஏகாந்தமாகவே என்றும்
ஐயுறவின்றி என்னில்
ஒய்யாரமாகவே நிமிர்ந்தே
ஓர் தனித்துவத்துடனே
ஔதாரியமாக மரம்
வளர்த்தேனே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனவனின் கவிதை – 1

இருட்டின்
நிறமொன்றில் - அவ்அறை
நிரம்பிக்கிடக்கின்றது

இழை சாகத்துடிக்கும்
மின்குமிழ் - தன்
இறுதிக்கணத்தை என்னுடன்
சேர்ந்து இசைக்கின்றது.

நடுவில் இருக்கும்
தகர மேசையில் - அவர்கள்
மூவர்...

இரண்டு போத்தல்கள்
இரு நிறத்திராவகம்
மூன்று கோப்பைகள்
நுரை நிரம்பும் மது
ஒன்றையொன்று
முறைத்த படி - இரு
கைத்துப்பாக்கிகள்
சில சுவைப்பொரியல்கள்
சுவர்க்கோடியில்
அனாதரவாய் - ஓர்
தானியங்கித்துப்பாக்கி

காறை பெயர்ந்த சுவர்களின்
கணுக்குகள் எங்கும் - யாரோ
அலறிய குரல்களின்
எச்சம்...
அனுங்கி அனுங்கி
ஓய்ந்துபோய் - அவ்விரவில்
உருத்தெரியா நிழலாய் - அவ்
அறையின் இடுக்குகளில்
உயிர்த்திருக்கும்...

மதுவை சிந்தாது பருகும்
கறுத்த உதடுகள் ஊடே ஓரிரு
வார்த்தைகள் - இடையிடையே
சுவைப்பொரியலுக்காய்
திறக்கும் - நிரம்பி
மூடிக்கொள்ளும்

என் முகத்தில்
வீழ்ந்த குத்துக்கள் - திறக்க
முனையும் என் கண்களை
சிரமப்படுத்தும் - உதையுண்ட
வயிறு
பசி பெருகி
உடைந்த இரு
விலாத்துண்டங்களை
செமிக்கும்...

வாய்
ஒரு கோப்பை தண்ணீருக்காய்
எஞ்சிக்கிடக்கும் உயிரை
சபிக்கும்
முடிவடைந்த
மதுப்போத்தலின்
இறுதிச்சொட்டில்
மின்குமிழின் இறுதியொளி
பட்டு
பூதாகரமாய் - என்
கண்களுக்குள்
விரியும்

அவர்கள்
காலியான கோப்பைகளை
கவிழ்த்து வைத்தார்கள் - ஒரு
கைத்துப்பாக்கியை
அவன் இடுப்பில் செருக
மற்றவனின் கைத்துப்பாக்கி...
சத்தமின்றி
ஒளியை என் நெற்றிப்பொட்டில்
உமிழ்ந்தோய்ந்தது...

அம்மா..
உன் அருகில்
நிற்கிறேன் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ.. என்ர பிள்ளைய
விடுங்கோ

அம்மா..
உன் அருகில்
நிற்கிறேன் நான்

ஆண்டவா
என்ர பிள்ளையக்காப்பாத்து

அம்மா..
உன் அருகில்
நிற்கிறேன் நான்



ஐயா என்ர
பிள்ளையக்காட்டுங்கோ

அம்மா..
உன் அருகில்
நிற்கிறேன் நான்

காற்றாய்..
ஒளியாய்..
காணாமற்போனவனாய்..
உன் அருகில்..

மாயன்

## காத்திருப்பு...

ஆத்தங்கர ஓரத்தில
அந்திசாயும் நேரத்தில...
ஆசமச்சான் வருவாரென
ஆசையோடு ஓடிவந்தேன்..

நேற்று போட்ட குறுஞ்செய்தி
நெஞ்சுக்குள்ள குறுகுறுக்க..
பார்த்தாரோ!.. பாக்கலயோ.!..
பயம்வேற மனசுக்குள்ள..

பார்த்துதானே இருப்பாரென..
பாதிமனம் சொல்லுது....
பச்சையும் சிவப்புமா....
போறாங்க எத்தனை பேர்....

இன்னுமே என்னவனை...
ஏனோ காணலயே...
காணல் நீர்போல....
காட்சியும் தோனுதுதான்...

ஓடையில இலவிழுந்து
ஓடுறத பார்க்கையில...
ஒத்தையில வருவாரோ...
உத்தரவு தருவாரோ...

மாலைச்சூரியனும்
மறைவதற்கு நேரமாச்சு
ஏனின்னும் வரலயென்று
ஏங்கியே தவிக்கிறேன்..

இ. ரஜீந்திரமூர்த்தி
மல்லிகைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலி!

கொட்டிய ஆரன்

வீரத்தின் மார்பொன்று
வேரோடு சரிந்தது...

பார்காப்பான் இவனென்று
பெயர்சூடிக்கொண்டவன்...
தார்சூடி போவென்று
தம்பியை கொண்டாடி....
நேர்முகமாய் செல்லாது
போர்நீதி கொன்றானே!

கார்மேக வண்ணன் - நெஞ்சில்
காரிருள் கொண்டு
ஊர்போற்ற ஒரு
கொலையாட்டம்
ஆடி முடித்தனன்!

ராமா...!
நேர்நின்ற எதிரியன்றில்..
ஏன் கொன்றாய்...?
முன்னின்றால் முடியாதென்று
பின்னின்று எய்தல்
போர்வியூகம் என்றாயோ...?

வாலி - உன்
வலிகளை ஆரறிவார்...

மனுநீதி பக்குவப்படுத்திய
மானுட தெய்வமொன்று
வால் கொண்டவனின்
வானர நீதி மறுத்தேனோ?

நாரணனின் கோரமுகத்தை
சாரமிட்டது - உன்
சாவு!

தாரையை இன்னொரு
தாரமாக்கி
தீட்டாகிப்போனது
இந்த இராமனின் பாணம்

வாலி.....
ஒரு
வலியகுலத்தின்
முதல்வன் நீ

கிஷ்கிந்தை இராச்சியத்தில்
கிளர்ச்சித்தீ மூட்டிவிட்டு
வென்றவன் சரிதையில்
தோற்றவன் வில்லன்
என்றாகி...

ஒரு
ஏக பத்தினி விரதனின்
யாக அக்கினியின்
கரு நாவின் தீண்டலில்
ஆகுதியாய் போனவனே..
உன் அர்ப்பணத்தை
உலகம் சமர்ப்பணமாய்
கொள்ளும்

வாலி..
மறைவாதம் ஒன்றின்
நிதர்சனமாய்...
உலகுள்ளவரை
அத்தனை ராமவான்களின்
நெஞ்சிலும்
உனது சிதை
எரிந்து கொண்டேயிருக்கும்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை....

கனவுகளில் இடும்
கோலத்தில்
வாழ்கிறேன் சற்றே நேரம்
இமைகள் மூடிய
மறுகணமே
இறப்பை தேட விழைகிறேன்

வெள்ளைத்திரை முன்னே
வேறெவரோ
எந்த கவலையோ
இல்லாமல்
நான் மட்டுமே
நின்றிருந்தேன்

எனக்கு பிடித்த
தனிமையில்
எனக்கு தீராக்காதல்

அதையே நான் ரசித்து
அதனுடனேயே வாழ்ந்தேன்
சிந்தனைக்கு இடமில்லை
தனிமை மட்டுமே போதும்,

என்னை ஏமாற்றாமல்
தனிமையும் என்னை
காதலித்தது
தன் மடியில் அமர்த்தியது
தன் முழு நேரத்தை
பாலாக ஊட்டியது

எனக்கு அது மிகவும்
பிடித்தது
ஏழேழு ஜென்மங்களிலும்
கூட
அது என்னுடன்
வருவதாக சொன்னது

வர வேண்டும் என்றேன்
பதிலுக்கு நானும்...

**சு. தில்ஹாஷா**
பாண்டிருப்பு
(அமெரிக்கன் கல்லூரி மதுரை)

## தமிழுக்கு

மூவாத்தமிழ் வந்தென்னை முத்தமிட வேண்டும்.
முத்தமிழும் என் காதில் ஒத்திச்செல்ல வேண்டும்.
பாகாய் தமிழ் உருகி புவி பரவ வேண்டும்.
பகை மறந்து பழந்தமிழர் இனமாக வேண்டும்.

படைசென்ற தடமெல்லாம் கொடியேற வேண்டும்!
சோழன் படைவென்ற இடமெல்லாம் தமிழாள வேண்டும்.

முத்தனைய தமிழ் மொண்டு நான் பருக வேண்டும்
மாற்றான் கயம் கண்டு
இவ்வுலகை நாம் வெல்ல வேண்டும்

செத்து உடல் சூடடங்கிப்போன பின்னும்
வற்றிடாத தமிழ்வெள்ளம் எனை சூழவேண்டும்.

**செம்பாட்டுச்சிறுபீலியான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரமும் சாபமும்

இன்று காலை வரை
எந்த துயரமும் இன்றி
குதூகலித்திருந்தன இரண்டும்!
அருகருகாய்
அண்ணன் தம்பியென
உறவு கொண்டாடி
மகிழ்ந்திருந்தன!
காற்று வீசும்போது அருகில்
நின்ற
காதலியின் முகத்தில்
முத்தமிட்டன
வெயிலில் வாடாமலும் மழையில்
நடுங்காமலும்
கம்பீரமாய் காட்சியளித்தன!
யாருக்கும் கை கட்டி
வாய் பொத்தி நிற்காமல்
இறுதிவரை நிமிர்ந்தே நின்றன
அந்த இரண்டு
கறுப்பு வைரங்களும்!

அழகு பனைகளான இரண்டு
ஆண் பனைகளுக்கும்
இன்றைய நாளே
இறுதி நாளென
தெரிந்திருக்க வாய்ப்பில்லை!
காவோலை விழ
குருத்தோலைகள் சிரித்த
கணங்களை - எண்ணி
இரண்டு பனைகளும்
காற்றில் கவிதை எழுதி கலங்கி



தமக்கு நேரப்போகும் துயர் பற்றி
அறிந்திருக்காத நெடும்பனைகள்
காவோலைகளை எண்ணி
கண்ணீர் வடித்தன.

இதயமற்ற இரண்டு மனிதர்கள்
வந்தார்கள்
மளமளவென ஏறிய ஒருவன்
இரண்டு பனைகளினதும்
இடுப்பில் கயிறு சுற்றினான்
மற்றொருவன் இயந்திரத்தை
இயக்கி பனைகளின்
அடிவயிற்றை அறுத்தான்!

சில நொடிப்பொழுதில்
பெரும் ஓசையோடு மண்ணில்
சரிந்தன
கற்பகத்தருக்களின் காதலர்கள்
நூற்றாண்டு கடந்தும் வாழும்
வரப்பெற்ற இரண்டு
பனைகளையும் வீழ்த்தியவனும்
வீழ்த்தென சொன்னவனும்
பனைகளின் ஆயுட்காலத்தையும்
சேர்த்து வாழ்ந்து
தொலையட்டும்!!

மு.யாழவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ ஆசை எனக்கு.....

ஈருயிர்க்காதல்
பெற்றதன் உணர்வுயிர்
வரமாய் ஓருயிர்
உருப்பெற்று
உழறுகின்றது...
இப்புவியில் - வாழ
ஆசை எனக்கென்று...

ஓடி நாளும் அது
விளையாடும்
முற்றமெங்கும்
கட்டுப்பாட்டு எல்லைகள்
பள்ளமும் மேடும்
பார்த்து நடவென
பதாதை இன்றிய
கோசங்களால் - நாளும்
மனத்திடம் இல்லாது
வளர்க்கப்பட்டு
வாழ்க்கையே..! கடினமென
வாழ பழகிவிட்டது.


நிபந்தனைகள்..
நிறைந்த - இவ்வாழ்வை...
வாழும் - வழியறிய..
ஒரு கலைக்கூடம்
விரும்பி போனதில்லை....

கட்டாயமாய் அனுப்பி
விடுகிறார்கள் அங்கே..!
இனிய.. என் வாழ்வை...
எனக்காக்... வாழ
எவருமே.. விடுவதில்லை.

என்றோ...
வாழ்ந்து - முடித்தவரினதும்...
வாழ - துடித்தவரினதும்..
வரலாறுகளை...
படித்து... படித்து...
பருவமாற்றத்தால்..
உருமாறி...
அர்த்தமே... புரியாத
இக்குத்தகை வாழ்வு
முற்றுப்பெறும் காலமதில்...

பிறப்பினதும் - மனித
வாழ்வினதும்
தத்துவார்த்தம் புரியாத
மனித மிருகங்களாய்
உரிமைக்கும்
உணவிற்குமாய்
போராடி போராடி...
கடைசிவரை - வாழும்
ஆசையோடு - இங்கு
அழிந்த வரலாறுகள் - என்னை
நீ.... நீயாகவே... வாழ்
என்றது ஆதலால்...
வாழ ஆசை எனக்கு

**மல்லிகைவாணன்**
திருமலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இனிதாய் வாழ்வர்

அன்பு ஒன்றே என்று அழியா ஊற்று
அனைத்து இன மக்களுமே அற்புத படைப்பு
ஒன்றுபட்ட பற்றுணர்வு உறவுக்கு கூட்டு
என்று பத்துச்செய்யுளோடு வாழ்க்கை பாட்டு...

அன்பு வரம் ஓங்க நாட்டில்
அமைதி தங்க இங்கு
அனைத்து இன மக்களையும்
அரவணைத்து நடப்போம்



நல்லிணக்கம் புரிந்துணர்வும்
நட்புறவு மிஞ்சி தொடர்ந்து
நடைமுறையில் வளர்வதற்கு
கை கோர்த்து நடப்போம்

இனவாதம் மதவாதம் பேரினவாதம்
ஏற்படாமல் இருப்பதற்கு
இலங்கை மக்கள் நாங்களென்று
இணைந்து வாழுவோம்

சிங்களவர் சோனகர் கிறிஸ்தவரும்
செந்தமிழர் மற்றுமுள்ள இனத்தவரும்
இங்கிதமாய் இந்த நாட்டில் உறவு பூண்டு
எல்லோரும் ஒற்றுமையாய் இணைந்து வாழுவோம்

சட்டமொழுங்கு பாதுகாப்பு நீதிநிலைக்க
சமத்துவமும் சமரசமும் சங்கமிக்க
திட்டமிட்ட கட்டமைப்பு சீரடைய
சேர்ந்தொன்றாய் பயணிப்போம் சேர்ந்து வாரீர்

மனிதநேயம் காத்து வாழ்வில்
புனிதமடைவோம் - தொடரும்
மனித உரிமை மீறல்களுக்கு
வசை பாடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழலுற்ற செயற்பாடுகளை
ஒன்று கூடி எதிர்ப்போம்
ஒற்றுமையாய் கூடி வாழ
உறவுப்பாலம் அமைப்போம்

சலுகையற்ற உரிமைகளை
சாதித்து பெறுவோம், என்றும்
சாந்தி சமாதானம் தொடர கூடி
சங்கற்பம் செய்குவோம்

எல்லா மதத்தவரும் மனித இனம்
என்கின்ற எண்ணமுள்ளோர் புனித மனம்
பொல்லாத இனமதக்குரோதம் போனால்
எல்லோரும் இளைஞன் நாட்டில் இனிதாய் வாழ்வர்

**சேனையூர் அ.அச்சுதன்**

## வீதி ஓரங்களில் ...

வீதி ஓரங்களில்
கிடைக்கும் கற்களை சேகரித்து
குறி பார்க்கும் பொழுதுகள்
உங்கள் பாவங்கள்
என் காதுகளில் வந்து
விழுவதில்லை.

குறி தவறும் பொழுதுகளில்
இழந்த வலியுடன்
உங்கள் அசைவுகளை
பார்த்துக் கொண்டிருப்பேன்
சிறகு விரித்து வானத்தை
மூடிய
ஒரு பாய்ச்சல் உங்களில்
இருக்கும்.

கொன்று குவித்த உடல்களை
நான் பதப்படுத்தும் பொழுது
என் உடலை பார்த்து காறி
உமிழ்ந்திருக்கிறேன்.

வியர்வை நாற்றம்
வாய் நாற்றம்
பீ நாற்றம்
மூத்திர நாற்றம்
எத்தனை துர்நாற்றங்கள்
என்னில்.

சீ
சீ
தூ

எங்கே
சுட்டுவில்லை கையில்
எடுங்கள்
குறி பாருங்கள்
எனை நோக்கி கற்களை
பொழியுங்கள்
அப்படியே மலைக்குள்
மூழ்கி போகின்றேன்.

**காரையன் கதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலத்தின் முகவரி

உதிரத்தை பாலாக்கி உயிரதைக்கொடுத்து
அதிரசமாய் அன்பை அழகாக ஊட்டி
எல்லாமமே நானாக எப்பொழுதும் வாழ்ந்த
அன்னைதான் எனக்கு அகிலத்தின் முகவரி

தன்பசி பொறுத்து தயவொடு தினமும்
என்பசி போக்கிய எந்தன் தாயே
உன்மடி தந்தாய் உறங்கிட நானும்
புன்னகை செய்தாய் பூரிப்பை கண்டே

கல்வியெனும் ஞானத்தை கற்று தெளிந்திட
சொல்லியே அறிவுரை சுகமாக அனுப்பிடுவாய்
தலைவாரி உடைபோட்டு நாளும்
கலையாத பாசத்தை கொட்டினாய் நீயும்



வாட்டும் வறுமை வாழ்வினில் வந்தாலும்
தேட்டம் இல்லாது தேம்பி அழுதாலும்
உலகம் அறிந்திட உயர்வினை அளித்து
புலர்ந்திடும் வாழ்வுக்கு புதுவழி சொன்னாயே

மகவாய் பிறந்து மண்ணிலே நானும்
புகழொடு வாழ்ந்திட பாதையை காட்டினாய்
சிகரம் தொட்டு சிறப்பாய் உயர்ந்திட
அகரம் சொன்னது அம்மா நீ தானே

பாசத்தை விதைத்தாய் பருவம் அறிந்து
நேசத்தை வளர்த்தாய் நெஞ்சுக்குள் எனக்கு
மொத்தமாய் தந்திட்ட மானுட தர்மத்தால்
இத்தரையில் அளித்திட்டாய் அழியாத முகவரியை
கற்றோர் அவையில் கலந்திட செய்து
பொற்றடம் போலவே தந்திட்டாய் முகவரி தான்.

**கவியருவி ஈச்சிலம்பற்று மதியாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு வசந்தமாக...!

வாழ்வினில் வசந்தத்தை நாடு
வாழ்க்கை வளம்பெற தொழில்தனை தேடு
ஆழம் வளர்ந்திட வேண்டும் - அத்தோடு
அறிவை வளர்த்திட நூலகம் சென்றாக வேண்டும்:

கசடற கற்றிடல் நன்று கல்வி
கற்றால் தான் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு!
உழைத்துண்டு வாழ்தலே இன்பம் - பிறர்
உழைப்பினில் வாழ்வதை ஏற்பது மானம்

தேடுதல் வாழ்க்கைக்கு தேவை - அந்த
தேடுதல் வீரனால் நேராகும் வாழ்வு
வள்ளுவர் குறள் வழி வாழ வாழ்வில்
வசந்தம் மனைவந்து மகிழ்ச்சியை தரும்

பெற்றோரை கற்றோரை மதித்து மனித
பிறப்பின் மகிமையை நிலைநாட்டல் சிறப்பு
முயற்சி உயர்ச்சிக்கு ஏணி நமது
அயராத உழைப்பொன்றே அமுதாகும் தீனி:



பணவீக்கம் விலை வாசி உயர்வேற்றம் தாக்கம்
மனை தோறும் வாழ் மக்கள் மனநிலை ஏக்கம்
ஜனநாயகம் நாட்டில் நடுக்கம் நேர்கோட்டில்
இனசன விரோதம் இல்லாத பயணம முன்னேற்றம்:

ஊடகத்துறையும் மனித சுதந்திரமும் சுயமாய்
நாடளாவ பயணித்தால் ஜனநாயகம் மிளிரும்
சட்டமும் ஒழுங்கும் நீதியும் நிலைநாட்டப்பட்டால்
நாட்டுக்கும் வீட்டுக்கும் வசந்தம் வீச வாய்ப்பாகும்

கவிக்குயிலோன் கலைமாமணி கலாபூசணம்
பல்துறைக்கலைஞர் சிவஸ்ரீ அ.அரசரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயவு செய்து வாசிக்க வேண்டாம்.



– லதா கந்தையா

தாத்தாவான பின்னும்
தகப்பன் ஆகலாம்.
பாட்டி ஆன பின்னும்
பாலூட்டலாம்
தாரத்தோடு கைகோர்த்து பிறர்
கண்கள் பதற நடைபோடலாம்.
அது அவரர்க்குரிய
தெம்பும் தேடலும்
வாழ்வும் வளமும்
யாருக்கென்ன வந்தது?
அவரவர் வாழ்வை அவரவர்
வாழட்டுமே.

பிள்ளை பெற்று
பிறந்தநாளும் கொண்டாடலாம்.
பிள்ளை வேண்டாமென
சுதந்திரமாயும் நடமாடலாம்.
கன்னிப்பெண்ணாக காலத்தை
நகர்த்தலாம்.
கலியாணத்தை விரும்பாத
ஆணாகவும் இருக்கலாம்.
யாருக்கென்ன வந்தது?
அவரவர் வாழ்வை அவரவர்
வாழட்டுமே.

எதிர்ப்பார்த்த வாழ்வுநிலை
அடியோடு மாறலாம்.
இருப்பவர் இல்லாதவராயும்
இல்லாதவர் இருப்பவரும்
ஆகலாம்.
சிரிப்பவர் அழுவதும்
அழுதவர் சிரிப்பதும்
காலம் வரையும் விதி.

உலகம் ஒரு விளையாட்டுத்திடல்
வந்தவர்கள் வந்தவினையை
விளையாடிக்களிக்கட்டும்.
பிறர் வாழ்க்கையில் யாரும்
விளையாட வேண்டாமே.
அவரவர் வாழ்வு அவரவர்
விருப்பம்.
இணைந்தும் வாழலாம்.
இல்லாமலும் வாழலாம்.
ஊருக்கு ஒற்றுமை எனக்காட்டி
உள்ளுக்குள் குத்துப்படலாம்.
பொறுப்பற்று தேசாந்தியாக
பற்றறுத்து போகலாம்.

பற்றிக்கொண்டே பதறிப்பதறியும்
வாழலாம்.
சேர்ந்தவர் பிரியலாம்.
பிரிந்தவர் சேரலாம்.
காணாமலும் போகலாம்.
கடல் கடந்தும் போகலாம்.
யாருக்கென்ன வந்தது?
அவரவர் வாழ்வை அவரவர்
வாழட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி.. நீ

கிளித்தெறிந்த கனவுக்குள்
விழித்தெழுந்த கவி நீ
காத்திருந்த மனதுக்குள்
பூத்தெழுந்த கவி நீ...

அசைகின்ற காற்றுக்குள்
இசையான கவி நீ
அழைக்கின்ற பெயருக்குள்
மழையான கவி நீ...

தீட்டிய தூரிகைக்குள்
சூட்டிய கவி நீ
சிந்தனை வரிக்குள்
வந்தணைத்த கவி நீ...

வசந்த வாழ்வுக்குள்
வந்துதித்த கவி நீ
வதன அழகிற்குள்
வருகின்ற கவி நீ...

கற்பனை தீக்குள்
சொற்பத கவி நீ
சிற்பமாய் செதுக்கிய
சிறப்பு கவி நீ...

கவிஞனின் உறவுக்குள்
வரவான கவி நீ
சொத்தாகி மனதுக்குள்
முத்தான கவி நீ...

**பாலகிருஷ்ணன் ஹம்சபாலன்,**
**பட்டிமேடு, தம்பலகாமம்.**

# அழகு..!

தாய் தந்தை பாதமே
சொர்க்கம் பின்
தான் கொண்ட தாரமே
ஆதாரம்.!

உழைத்துண்டு வாழ்தலே
இன்பம் பிறர்
உழைப்பை திருடுதல்
பாவம்.!

தன்மானம் காப்பது
வீரம் கவரி
மான் போல வாழ்தலே
புனிதம்.!

இரந்துண்டு வாழ்வது
இழுக்கு வாழ்வில்
இழுக்கு வராமல் காப்பதே
சிறப்பு.!

கற்பதை கசடறக்கற்று
நற்பணி புரிவது
சற்குண மாணவர்க்கு
அழகு.!
மனிதாபிமானமே
பெரிது இதனை
மதித்து நடப்பதே
மனித பிறப்புக்கு
மதிப்பு.!


**புடவைக்கட்டு சமிரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லொனாத்துன்பங்கள் சுமையாகி போச்சிதின்று

சேனையூர்
இரா. இரத்தினசிங்கம்



மானிட வாழ்வு இன்று
வறிதாகி போச்சு
வாழுவதென்பதெல்லாம்
வழிமாறி போச்சு

ஆளில்லா விமானமாகி
அலைகின்ற நாளாச்சு
கேள்விக்குறியாகி
கிடக்கின்றோம் நாமாச்சு

ஏனிந்த அவலமென்று
எல்லோர்க்கும் தெரிஞ்சாச்சு
எத்தனைதான் மன்றில்
பேசினாலும் என்னாச்சி

மரவள்ளி விலையின்று
மலையேறி போயாச்சு
மற்றவைகள் விலையோ
வந்து வந்து உயர்வாச்சி
ஊந்துருளி ஓடுதற்கு
ஒருநாள் விலை என்னாச்சு
ஏந்துகின்ற நிலையின்று
எங்களுக்கு முடிவாச்சு

சுயநலங்கள் உயர்பீடமேறி
சுத்திகரிப்பு வேலைகளேயாச்சு
பொதுநலமே இல்லாது இன்று
போனதுவே பொருளாதாரம்
வீழ்ச்சி

தினம் மக்கள் படும் துன்பமாச்சு
இடமாகி போனதிங்கு ஆட்சி
கடும் போக்கு நிலையின்று காட்சி
காண்கின்றோம் தினமேது மீட்சி

கவிதைகளை ச.திருச்செந்தூரன், பிரதம ஆசிரியர், வாசல் வாசகர் வட்டம், 691/C, அன்புவழிபுரம், திருகோணமலை எனும் முகவரிக்கோ, vaasalvaasagar@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ, 0767687107, 0778918096 ஆகிய வட்ஸ் - அப் இலக்கங்களுக்கோ அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவு காத்த கிளியானதே!


நிலாவெளியூர்
கெஜ. தர்மா



உரத்தின் விலை உயர்ந்தால் - உணவு
உற்பத்தி செலவு உயருதென்று
உயர்த்துகிறான் விவசாயி
உற்பத்தி பொருட்களின் விலையை...
எரிபொருள் விலை உயர்ந்தால்
போக்குவரத்து கட்டணத்தை
ஏற்றி விடுகிறான்
வாகன உரிமையாளன்...
மாவின் விலை உயர்ந்தால்
மாப்பண்டங்களின் விலையை
உயர்த்தி விடுகிறான்
பேக்கரி உரிமையாளன்
ஆவின் தீவனம் விலை உயர்ந்தால்
ஆவின் பாலின் விலையை
உயர்த்துகிறான் கால்நடை வளர்ப்போன்...
அன்றாடம் கூலி வேலைசெய்பவன்
அவன் தன் முதலாளியிடம்
அழுது புலம்பி தனது
சம்பளத்தை உயர்த்தி விடுகிறான்
என்னதான் விலை உயர்ந்தாலும்
என்றும் கஷ்டமுற்று வாழ்பவன்
கௌரவ பிச்சைக்காரனான
அரச சேவையாளனும்
ஓய்வூதியம் பெறுபவனும் மட்டுமே...
பட்ஜெட்டும் அவர்கட்கு
இலவுகாத்த கிளியானதே...

# எழுத்தாளன்

யுத்த பூமியில்
சமூகத்திற்காக களத்தடுப்பில்
பேனா முனையால்
தடுப்பதையும்
யுத்தக்குற்றமென்றால்
ஜனநாயகத்தின் கடைசி
ஆயுதம் எனக்கு இதுவே
இரத்தம் சிந்தாமல்
போராடுவதற்கும் தயார்...
முடிவு காணும் வரை..!




மு.கா.முகம்மது அஸ்வர்
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைகள்

சுவிஸ் சுரேஷ்



அன்பின்றி பெருந்தவிப்பு!
அரவணைப்பில்லா துயரம்
உறவோடு வேரறுந்த புளுக்கம்
ஊர் கொடுக்கும் பரிகசிப்பு வேதனை
தெரிவில்லா பிறாண்டும் தெள்ளரிப்பு
தேய் பிறையாய் தெளிவற்ற வாழ்க்கை.


உயிரறுந்து மண்விட்டு போவதால்..
உன் பிரச்சனை தீருமென்றால்
உலகில் உச்சபட்ச தண்டனையாய்
உயிர்பிரியும் மரணதண்டனை எதற்கு?
தண்டனையே தீர்வாய்க்கொண்டால்
தகுமோ அன்றி தவறோ... உன் முடிவு..?

இடைக்கால தீர்வுக்காக
இன்னுயிர் போக்கும் ஆன்மாக்களே
இன்னும் கொஞ்சம் சில நொடிகள்
இருக்கத்தான் பாருங்களேன்
ஒவ்வொரு நாளும் உயிர்பிழைக்க
ஓங்கி துடித்தழும் மானிடரை
ஓரமாய் கொஞ்ச நேரம்
ஒதுங்கி நின்று பாருங்களேன்.

துன்பத்திற்கு தீர்வு துன்பம் என்றால்!
இன்பத்திற்கு இங்கேது வேலை...?
எதுவும் வாய் வார்த்தையில் சொல்லலாம்
எடுக்கும் முடிவு என்னமோ ஒரு கணமாதலால்...?
வேதனைப்படும் போது கைபற்றி ஆற்றா அன்பு
வேடிக்கைக்காய் உதட்டிலேனும் எழட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரக்கன் கொரோனா

மனித வாழ்வில் மயக்கங்கள் எத்தனை எத்தனையோ!
மயங்கி தெளிந்தவன் வாழ்வுகள் எத்தனை எத்தனையோ!
சோகம் நிறைந்த வாழ்வுகள் எத்தனை எத்தனையோ!
சோமாரி பொழிந்த வாழ்வுகள் எத்தனை எத்தனையோ!

நாட்டுக்கு நாடு யுத்தங்கள் எத்தனை எத்தனையோ!
நாட்டுக்குள்ளேயே யுத்தம் எத்தனை எத்தனையோ!
யுத்தங்களில் பாவிக்கும் படைக்கலங்கள் எத்தனையோ!
யுத்தங்களால் அழிவுகள் எத்தனை எத்தனையோ!

பல் குழல் துப்பாக்கிகள் பரவசமான
கிபீர் விமானங்கள் மலை ஏறும் டாங்கிகள் ஏவுகணைகள்
இத்தனைக்கும் அஞ்சாமல் போரிட்ட மனிதன்
வென்றான் மகிழ்ந்தான் பரவசப்பட்டான்.

உலகையே ஆயுதமேதுமின்றி ஆட்டிப்படைக்கும் கொரோனா
உலகே நடுக்கமும், முடக்கமும்
தொட்டாலும், பட்டாலும் உள்வாங்கினாலும் சாவு உறுதியே...
விஞ்ஞான உலகில் இன்னும் விடை காணவில்லையே இதற்கு

உறுமிய உலகு உறங்கிப்போச்சு உணர்விழந்து...
ஓடிய ஆடிய பறந்தவை அனைத்தும் நின்று போச்சு
உலகெலாம் மடக்கி உறைவிடத்தில் முடக்கிய ராட்சதன்
கொரோனா வைரஸ் உலகெலாம் கொடி கட்டி பறக்கின்றதே!

நீதி நெறியற்ற நிலையிலா உலக அரசுகள்
நெறிதவறியதாலோ என்னவோ ஏங்கும் இந்த நிலை
ஏன் இந்தக் கொரோனா வல் அரக்கன் கொடுமை
எங்கிருந்து புறப்பட்டான் பாம்புண்ணும் ஊரிலிருந்தா?



கலாபூஷணம், பல்துறை வித்தகர்
த.சிதம்பரப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களின் ஏக்கம் தீருமா இந்நிலை மாறுமா...?



அகிலத்தில் நாம் பிறந்தோம்
ஆண்டவனின் அருள்தன்னால்
அவலம் மிகவாகி
அவதிப்படுகின்றோம்
சொல்ல முடியா சோகத்தினால்
சோதனைக்குள் சோர்ந்து
சுருங்குகின்றோம்
எல்லையது இல்லையோ
எங்கள் துயரமது தான் தீர...?

ஆழ்கடலில் வீழ்ந்தவர் போல்
ஆவி தடுமாறுகின்றோம்
தேவைக்குரிய பொருளெலாம்
நாளுக்கு நாள் விலை
ஏறுதையோ...!
நமது நெஞ்சு பதறுகுதே
நாம் எப்படி வாழப்போகின்றோம்
என்று...?

பாலருக்கு உணவளிக்க பால்மா
இல்லை
பாவப்பட்ட குழந்தைகள்
பசியாலே வாடுகின்றார்
நோய்க்கு மருந்தில்லை
நோய்வாய்ப்பட்டோர்க்கு
உரிய சிகிக்சையில்லை...

எரிபொருள் பற்றாக்குறையினால்
எத்தொழிலும் செய்ய
முடியவில்லை

வேர்வை சிந்தி விவசாயிக்கு
வேண்டிய பசளையில்லை
மீன்பிடிக்கும் மீனவர்க்கு
மண்ணெண்ணெய் டீசல்
மணம் போல் கிடைப்பதில்லை...

பொன்னான இந்தப்பூமியிலே
பொறுப்பற்ற நிர்வாகத்தினால்
புலம்பாதவர் யாரும் இல்லை
புரிந்திடுவீர் இதை உரியவர்கள்

குடும்பம் குடும்பமாய் இனிக்கூடி
சாவதே நன்றென
முடிவெடும் நேரம்
வெகுவிரைவில் வருமென்று
வெந்து மனம் நோகின்றார்
சிந்தனையும் கொள்கின்றார்

பாங்கான எம் வாழ்வு
பறிபோச்சுதென
பாவிமக்கள் பதைபதைத்து
பரிதவிக்கின்றார்
ஏழைமக்களின் வாழ்வு என்று
தான் விடியுமோ...?

**அண்ணாவியார்**
**வேலாயுதம்பிள்ளை**
**சரவணபவானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை தொழிலாளர்

சேனையூர்
நவரெத்தினராஜா

தேனமுதம் போன்ற மொழியழகு குழந்தைகள்
வானம்பாடி போல துள்ளி ஆடி மகிழுதே
கானம் பாடும் கவலை தெரியா சுட்டிகள்
தானம் போல கடவுள் தந்ததல்லவா

அம்மா அப்பா மடி கிடந்து தவழ்ந்தவர்
பாட்டன் பாட்டி பார்வையிலே செழித்து வளர்ந்தவர்
சும்மா தானும் உழைப்பதற்கு அனுப்பலாகுமா
உழைத்து வரும் பணத்தை எண்ணி மகழிலாகுமா

ஆசைகாட்டி குழந்தைதன்னை இழுத்து வந்தார்கள்
காசை காட்டி வேலைகளை செய்ய வைத்தார்கள்
ஆசை காட்டி மோசம் செய்து வாழ்ந்திடலாமோ
தேசமெங்கும் நாளை அவர்கள் கூலிகள் தானோ

வீட்டு வேலை செய்திடத்தான் அனுப்பிடலாமோ
வாட்டும் வெயிலில் கல்சுமக்க விட்டிடலாமோ
வீடி சுற்ற குறைந்த கூலி கொடுக்கிறீங்களே!
பாடி ஆடும் பிஞ்சுகளை வதைக்கிறீங்களே!

பிள்ளைகளின் கல்வி உரிமை பறித்திடலாமோ
மெள்ள அவர் மனமுடைய கதைத்திடலாமோ
பிள்ளை மனம் புரிந்திடாத எந்த வீடு உய்யுமோ
கள்ளராட்சி கண்டு நாடு மெள்ளமெள்ள தேயுமே!

சட்டம் இருந்தும் குழந்தைகளை நசித்திடலாமோ
பட்டம் வாங்கும் கையில் பாரம் ஏற்றிடலாமோ
மொட்டுவாசம் வீசுமுன்பே பறித்து மாலை கட்டிடலாமோ
நட்டம் நாளை நாட்டுக்கன்றி வேறு எவருக்கோ

அறிவுப்பசி தீர்த்திடத்தான் சொல்லவந்த சேதி
வயிற்றுப்பசி தீர்ப்பதற்காய் அலைவதென்ன நீதி
அள்ளி பழங்கள் வீதியிலே விற்பதென்ன கர்மம்
பள்ளி செல்ல புத்தகப்பை சுமப்பது தான் தர்மம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசெயல்வகை

## திருக்குறள் கவிதை

குடியிலே பிறந்தவன் சிறந்தவன் ஆகின்றான்
குடிகளின் தனித்துவம் அதுவே மகத்துவம்
குன்றாது புகழ் மங்காது அறமும்
குவலயம் போற்றும் மறையும் உரைத்தது

கடமையில் முதன்மை குடும்பம் காப்பது
காரியம் இதுவே பிறப்பின் கடனே
முயற்சியும் அறிவும் இடையறா செயலும்
முன்னே நகர்த்தும் ஆற்றுவார் திறத்தில்

உயர்த்திட துணிந்தால் தெய்வம் துணையே
உடையை இறுக்கி கட்டியே வந்திடும்
உடையதை தாழ்வுறாது கடுமையாய் முயல்வோர்
உகந்த எண்ணம் முன்னமே அடையும்

குற்றம் களைந்து குறித்ததில் நின்றால்
குவலய மாந்தர் சுற்றமாய் சூழ்வார்
ஆண்மை நிலைப்பது இல்லத்தின் பொறுப்பை
ஆளுகை புரிந்து தனக்குள் எடுப்பது

போர்க்கள பொறுப்பு வீரரின் சிறப்பு
பொருந்திட வல்லோன் சுமையினை தாங்குவான்
சோம்பலில் தாழ்ந்தால் நோக்கம் தடையே
சோர்வுறா கடமை காலத்தில் இல்லை


தூய்மையில் நிலைக்கும் காப்பான் உடலே
துன்பத்தை தாங்கும் வலிமை பாத்திரம்
துணையாய் ஒருவன் இல்லா குடும்பம்
துயரம் தாக்கி அடியற்று வீழும்...



தெ.கரிதரன்
(சம்பூர் சமரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்பாதே!

அவர்கள்
அடிக்கடி துடிக்கும்
இதயத்தின் ஓசை போல
ஆசை வார்த்தைகளை
அசை போட்டு கொள்வார்கள்.

இனி எல்லாம்
சௌக்கியம் தான்
ஐக்கியப்பட வேண்டியவர்களை
அடிதடிக்குள் இழுத்துவிட
மேடைகள் - போலி
கண்ணீர் வடிப்பார்கள்.

வாக்குகளை இலக்கு வைத்து
வக்காலத்து வாங்கும்
இக்காலத்து நரிகள்
ஏப்பமிட
முக்காலமும் அறிந்த
தேவனை போல்
முழுந்தாளிடுவர்.

வாய் வழிந்தோடும் எச்சில்
வார்த்தைகளை விளாசி
தள்ளும் போது - ஏமாந்து
அலையும் ஏழையை போல்
மனதும் தடுமாற்றம்
கொள்ளும்
கச்சகம் போல் பலர்
தாவி கொள்ளுதல் பின்
கஞலுதல் எல்லாம்
தேர்தல் காலத்தின்
கலவி போலாகி
விடும்.

வேட்கை கொள்ளும்
மானிட மனதில்
மனிதா நீ வெறும்
குருளையாய் உன்னை
உண்ணுவர்.

அப்போது
நீ நினைப்பாய்
இவர்கள் வாலில்லா
இனத்தவர்கள்
என்று.

**H.M. ஹலால்தீன்**
(உலா வரும் கலா)

கச்சகம் - குரங்கு
கஞலுதல் - நெருங்குதல்
கலவி - புணர்ச்சி
குருளை - குட்டி
உன்னுவர் - நினைப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்

முஹம்மட் சுபைர் தில்ஷாத் பானு
திருகோணமலை

இறைவன் இட்ட
என் முதல் வரி
அம்மா என்னும் முகவரி....

நரை விழுந்தும் - பச்சை குழந்தை
நான்
அம்மா உன் பாச மடியில் தான்...

தோளுக்கு மேலே வளர்ந்தாலும்
உன்
தோள் சேலை பட்டாலே தூக்கம்
தேடி வரும்
எப்போதுமே நான் பாரமாய்
தெரிந்தும்
முகம் மலர்ந்தே என்னை
சுமந்தாய்...

பத்து மாதம் கருவில்
சிறு வயதில் மார்பில்
பதின்ம வயதில் மடியில்
மணம் முடித்தும் உன் மனதில்

பிழை என்ன செய்தாலும்
தாய்க்கு தன் குழந்தை பொன்
குழந்தை

கட்டுப்பணத்துடன் கடை
கடையாய் தேடினேன்
எங்கு கிடைக்கும் உன் கை
அமிர்த அன்னம்..

நிலாவை கூட்டி வந்து
நடுவெளியில் ஒளிர விட்டு
முயல் கதைகள் முழவதும்
சொல்லி
மூன்று வாய் ஊட்டினாலும் முழு
வயிறும் நிரம்பி விடும்...

தோற்று துவண்டழும்
போதெல்லாம் - நீ
தலை தடவித்தான் என்னை
தடம் பதிக்க வைத்தாய்...

அடுப்பெரிக்க எண்ணெய் இல்லை
அடுத்த வேளை சோறும் இல்லை
ஆனால்
அரச வீட்டு வாரிசு போல
வடிவாய்த்தானே
வளர்த்தெடுத்தாய்

அம்மா உன் நிழல்களை
அணைத்த படி
நான் நிஜமாக நீ வேண்டும்
இல்லை நிழலாகி உன்னைச் சேர
வேண்டும்...!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் உலகில் உண்டு.

சிவானந்தம்
இலிங்கநகர்

நெஞ்சம் உண்டு
நேர்மை உண்டு
நஞ்சை ஊட்டும்
நரிகளும் உண்டு

பஞ்சம் உண்டு
பரிவும் உண்டு
பார்த்து உதவா
பிரிவும் உண்டு

வெஞ்சம் உண்டு
வெறியும் உண்டு
வஞ்சம் தீர்க்கும்
வகையும் உண்டு

கஞ்சியும் உண்டு
கனியும் உண்டு
கெஞ்சிக்கேட்டும்
கனியார் உண்டு

கஞ்சன் உண்டு
கயவன் உண்டு
கருணை இல்லா
கண்கள் உண்டு

கெஞ்சல் உண்டு
கொஞ்சல் உண்டு
கேடுகள் செய்துக்
கெடுப்பார் உண்டு




# நெடுந்தூர பயணம்

பிரிதிவிராஜ் லோஜி

சட்டென திரும்பினேன்
ஏதோ ஒரு
மென்விரல் தொடுதலின்
உணர்வின் பரிசம்
மின்காந்த அலைகளாய்
ஊடுருவ...!

சட்டென திரும்புகிறேன்
காணும் திசையெங்கிலும்
காணவில்லை
நான் யூகித்திருந்த
விரல்களை கொண்ட
அப்பாவின் சாயலை..!



நான் மட்டும் தான்
வெறுமனே சுமந்து
அலைகிறேனோ
அவிழ்க்க முடியாத
அன்பின் மூட்டை முடிச்சுகளை
எல்லையற்ற வானத்தில்
எங்கிருக்கிறாரோ அவர்...!

இனிமையின்
சுவையை
இதயத்தில்
ஏத்தி வைத்த இமயம்
அல்லவா அவர் அன்பு..!

அப்பாவின்
இறுதி மூச்சு
அம்மாவை
முடக்கியது
வீட்டுக்குள்ளே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடலின் துவக்கம்

கருவறை தொடக்கம் கல்லறை வரை
தேடலின் துவக்கம் தொடங்குது பூமியில்
மானுட தேடலோ வியப்புடன் விந்தையானது
தேடலாய் ஆகுது மனித வாழ்வு.

மழலையாய் அன்னையின் அன்பினை தேடல்
பசியை போக்க உணவை தேடல்
இப்படியே தொடர்கிறது மனிதனின் தேடல்
தேடலது தீர்வதில்லை மண்ணுக்குள் செல்லும் வரை

சம்பூரணி சுஜந்தினி யுவராஜா

## கருவறைக்குள் ஒரு வகுப்பறை

கருவறைக்குள் ஒரு
வகுப்பறை...
கல்வி அரங்கின்
சிம்மாசனத்தில் தாயும் சேயும்
ஆசானாய் கல்விக்கூடத்தில்
தாய்
மாணவனாய் கருக்கூடத்தில்
சேய்
பண்பாய் விதைக்கும்
மொழிகளை
பௌவிதமாய் சேமிக்கின்றன
தனக்குள்...
கணிதத்தில் தேறினால்
அவனோர்
பொறியியலாளர்
கலைகளை தேற்றினால்
அவனோர்
கலைஞன்
விஞ்ஞானத்தை தேற்றினால்
அவனோர் விஞ்ஞானி
ஞானத்தை புகுத்தினால் அவனோர்
ஞானி
ஓவியத்தை வர்ணமாக்கினால்
அவனோர் ஓவியன்
வார்த்தைகளை
கலவையாக்கி சிந்தனைகளை
அரங்கேற்றினால் அவனோர்
பேச்சாளன்
எதை விதைத்தாலோ அதை
அறுவடை செய்வாள் - தாய்



பஸ்மிலா சியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் நடந்தாள்

இப்பத் ஸாஹிரா



அவள் நடந்தாள் காடுகளுக்கிடையிலும்
மலை பாறைகளுக்கிடையிலும்
அவள் தனக்கு என்ன நடந்தது
என்று அறிய விருப்பமின்றி
அவளின் ஆத்மாவை முழு வனாந்தரத்திற்கும்
ஒப்படைத்திருந்தாள்
தன்னை காண வரும் மனித மிருகங்களிடமிருந்து
தப்பித்துக்கொள்வதற்கு
ஆட்களை உட்கொள்ளும் விதமாக தோற்றமளிக்கும்
மரங்களின் வேரினை
உடைத்து அதில் வெளிப்பாயும்
சாற்றினை பிசைந்து தன்
சரீரம் முழுவதும் படரச்செய்திருந்தாள்

அவள் தன்னை இயற்கையுடன் சங்கமிக்கும்
முயற்சியில் வெற்றி பெற்றிருந்தாள்
அவளுக்கும் அவர்களுக்கும்
இடையில் காணப்பட்ட வித்தியாசம்
இயற்கை ஒன்றே.



# தேடல்...

முடிவில்லா பாதையில்
முடித்திடா பயணங்கள்,
தோல்விகள் தோள்களில்
காயங்கள் கால்களில்
வடுக்கள் யாவும்
வரமாகிடவே, காணும் யாவிலும்
இன்பம் கொட்டிக்கிடக்க
தேடித்தினம் களைக்கிறோம்.
அலைகிறோம்
செல்வம் பெருக்க
காட்சிப்பிழைதனில்
இணைசேரா பாலமாய்
தேடல்கள் தொடர்கிறது
மாசில்லா நிம்மதி தேடி.....

**சட்டத்தரணி ஷிரோமி ரவீந்திரராஜா**
சட்டத்தரணி திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANTHEM OF KURDISTAN

Hey enemy, the Kurdish nation is alive with its language
Can not be defeated by the weapons of any time
Let no one say Kurds are dead
Kurds are living
Kurds are living, their flag will never fall

We, the youth are the red colour of the revolution
Watch our blood that we shed on this way
Let no one say Kurds are dead
Kurds are living
Kurds are living, their flag will never fall

We are the children of Medya and Keyhusrew
Both our faith and religion are our homeland
Both our faith and religion are Kurd and Kurdistan
Let no one say Kurds are dead
Kurds are living
Kurds are living, their flag will never fall

The Kurdish youth have risen like lions
To adorn the crown of life with blood
Let no one say Kurds are dead
Kurds are living
Kurds are living, their flag will never fall

The Kurdish youth are ever present and
Forever will be ready to sacrifice their lives
Sacrifice each life they have, each life they have





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்திஸ்தானின் தேசிய கீதம்

ஏய் எதிரியே!
மொழியுடன் உயிர்த்திருக்கின்றது
குர்திஸ் தேசம் - காலத்தின்
எந்தவொரு ஆயுதத்தாலும்
வெல்லவே முடியாததாய்..
குர்துகள் இறந்துவிட்டதாய்
எவரையும் சொல்ல விடாது...
குர்துகள் சாகவில்லை
வாழ்கிறார்கள்
அவர்களின் கொடியோ
என்றென்றும் வீழ்வதில்லை

இளைஞர்கள் நாங்களே
புரட்சியின் செந்நிறமாய்
அதற்காய்
சிந்திய எங்கள் குருதியினை
பாருங்கள்
குர்துகள் இறந்துவிட்டதாய்
எவரையும் சொல்ல விடாது...
குர்துகள் சாகவில்லை
வாழ்கிறார்கள்
அவர்களின் கொடியோ
என்றென்றும் வீழ்வதில்லை

மெத்யாவினதும்
கெய்ஹுஸ்ருவினதும்
குழந்தைகள் நாங்கள்
தாய்நாடே எங்களின்
நம்பிக்கையும் மதமும்
குர்துவும் குர்திஸ்தானுமே
எங்களின்
நம்பிக்கையும் மதமும்
குர்துகள் இறந்துவிட்டதாய்
எவரையும் சொல்ல விடாது...
குர்துகள் சாகவில்லை
வாழ்கிறார்கள்
அவர்களின் கொடியோ
என்றென்றும் வீழ்வதில்லை

குர்துவின் இளைஞர்கள்
சிங்கங்களாய்
எழுந்து விட்டார்கள் - தம்
குருதியால் வாழ்வின்
மணிமுடியை
அலங்காரஞ் செய்தபடி
குர்துகள் இறந்துவிட்டதாய்
எவரையும் சொல்ல விடாது...
குர்துகள் சாகவில்லை -
வாழ்கிறார்கள்
அவர்களின் கொடியோ
என்றென்றும் வீழ்வதில்லை


குர்திஸ்சின் இளைஞர்கள்
எப்போதும் தயாராக
என்றைக்கும் தம் உயிரை
கொடையாக்க - கிடைக்கும்
ஒவ்வோர் வாழ்விலும்
கிடைக்கும்
ஒவ்வோர் வாழ்விலும்.

**செய்க்மோஸ் ஹஸன்**
**தமிழில் – மாயன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவனும் தேவன் தான்....



ச.திருச்செந்தூரன்

கோழியின் துணை கூவிற்று...
அத்தாங்கு எடுத்து
தனியன் புறப்பட்டான்...
ஆழிவாய்ச்சத்தம்
உடைத்து
அசைகின்றான் அவன்.
குளிர் சுட்டது...
தண்ணீர்
அரவணைத்துக்கொண்டது...
ஆழி முழுதும்
நடந்தே கடப்பான்
அவன்...
காய்ச்சலும், தடிமனுமல்ல
எந்த சனியனும்
அவனை அண்டாது...
உலக வைத்தியர்கள்
யாவரும்
அவன் காலில்
வீழ்ந்து
தெண்டமிடுவார்கள்..
மருந்துகளும்,
மாயக்கம்பனிகளும்
இவன் முன்
விசராகிப்போகும்.
ஈழத்து
ஆழித்தாயின்
மூத்த மைந்தன் இவன்..
அண்ட சராசரமும்
இவனுள் அடக்கம்.

சோர்ந்து போகும்
வீணன் அல்ல இவன்...
உழைப்பாளி
கடும் கடல் உழைப்பாளி...
கிரகபலன்
யாவும் இவன் முன்
தோற்கும்..

இவனும் ஒருவகை
தேவன் தான்..
வறுமையை
துரத்த
சல்லிக்கடலை
கடைகின்றான்..
இவன்.
துடையுடைத்த
பீமனை வென்றவன் தான்...
காலிமுகத்திடலில்
பெரும் புரட்சி செய்தவன்
இவன்..
வாழி...
உனக்கான அரசியலை
நீயே எழுதத்தொடங்கு...
வீணர்கள் இவர்கள்
உன்னிடம் பயில்வார்கள்...
புதிய உலகம்
உன்னால் பிறக்கட்டும்
தொடர்ந்தும் நடைபழகு
உன் பின்னால்
முழு உலகும் வரும்..
வாழி நீ பல்லாண்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொலைந்த வாழ்வு

ஒரு முனிவனுக்கேயான
பற்றறுத்தலுடன்
வன்னியில் இடம்பெயர்ந்தனர் மக்கள்
மீண்டும் வாழ்தலுக்காய் வரம் கேட்டு நின்றனர்

குடிசைகள் பூத்த மண்ணில்
ஒரு விதவைத்தாய் இருண்மை சுவாசித்து
கைகளை தாடைகளிடமும்
கண்களை வானத்திடவும் கொடுத்து



அவளின் மகன்
செம்மண்ணில் புதைந்து கிடப்பதாய்
சொன்னது ஒரு செய்தி
உறவுகள் இராமேஸ்வரக்கடலில்
பணத்தை மாலுமியிடமும், உயிரை காலனிடமும்
கொடுத்ததாய் யாரோ ஒருவன்
சொல்லிப்போனான்

இன்னும் ஏன் அவள்
வானத்தை பார்த்திருக்கிறாள்
மண்ணை பார்த்து இருக்கலாம்
மகன் தொலைந்த இடமென்று
என்னவோ...

கடலை பார்த்திருக்கலாம்
உறவுகள் தொலைந்த இடமென்று
பிறகு ஏன் வானத்தை பார்த்தாள்..?
தன் வாழ்வு தொலைந்த இடமென்றா..?



**யதுஷா செல்வரெட்ணம்**
தரம் 10
தி/மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதிகொள்



திவானிகா யோகரஞ்சன்
*13 கலைப்பிரிவு*
தி/மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி

எழுதி வாழ்தல் வேண்டும்
எண்ணித்துணிதல் வேண்டும்
அழுது புலம்பும் வாழ்வில்
அடிமைத்தனம் ஒழிய வேண்டும்...

தேட்ட மெதிலும் வேண்டும்
தெரிந்து கூடல் வேண்டும்
ஏட்டிலுள்ள நீதி
எங்கும் செறிதல் வேண்டும்
முன்னாள் காலை வைத்து
முயன்று வாழ்தல் வேண்டும்!

உண்மை தேர்ந்து நாளும்
உழைத்து வாழ்தல் வேண்டும்
எண்ணம் சிறத்தல் வேண்டும்
எழில்கள் கொஞ்ச வேண்டும்
என்னால் முடியும் என்றே
என்றும் உழைத்தல் வேண்டும்...!

கூட்டத்தோடு வாழு
கொள்கையதினில் போடு
நாட்டுக்காக நாளும்
நல்ல திட்டத்தோடு
வீட்டை மறந்து விடாதே
வெல்லும் வழிகள் பாரு...!

அலைகள் போல நெஞ்சை
அலைத்து வாழ்தல் வேண்டும்
மலைகள் போல துயரம்
வந்து ஆட்டி வைக்கும்
நிலைகள் தளர வேண்டாம்
நெஞ்சில் உறுதி கொள்ளு!

# பெண்



நிலவை பார்த்து சிரிக்கிறாள்
நித்திரை கொள்ள மறுக்கிறாள்
உலகை பார்த்து அழுகிறாள்
உண்மையை மறைத்து வாழ்கிறாள்

பேதைமை கொண்டு அலைகிறாள்
பாரம் சுமந்து மடிகிறாள்
சாதம் தேடி ஓடுகிறாள்
சாவிடம் தஞ்சம் கேட்கிறாள்

காதல் செய்து தோற்கிறாள்
காரணம் இன்றி அழுகிறாள்
நாதனுக்கடிமையாகிறாள்
நாயினும் கீழாய் வாழ்கிறாள்

பாரதி பாதையில் வாழ்கிறாள்
பாஞ்சாலி போல அழிகிறாள்
காரதன் வாழ்வாய் அலைகிறாள்
காவிய பெண்ணாய் அழுகிறாள்


உரிமைக்காக குரல் கொடுப்பாள்
உண்மையை உரத்தே சொல்லிடுவாள்
காரிகை இவளின் கரந்தண்ணில்
பேரிகை முழங்குவது தோழர்களே..!



மதுஷானி லோகநாதன்
*தரம் 10*
தி/மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு



தயாணி உதயசங்கர்
13 கலைப்பிரிவு
தி/மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி

ஆதி முதல் அந்தம் வரை
என் இதயத்துடிப்பு உள்ளவரை
இரத்த நாளங்கள் ஓயும் வரை
கண் இமைப்பொழுது மூடும் வரை
உயிரோடு இணைந்ததான
அருமையான உணர்வு
அதுவே நட்பு

பட்டாம்பூச்சியாய் பறந்த உள்ளம்
பரிதவித்து வீழ்ந்திருந்த
வேளையில்
அற்புதமாய் ஆறுதல் தந்து
புதியதோர் யுகம் படைக்க
விதி செய்வது
நட்பு என்ற ஒற்றைச்சொல்லாகும்

ஆறறிவுள்ள மனிதருக்கு
மாத்திரமோ நட்பு - அல்ல
ஓரறிவுள்ள புல்
பூண்டுகளுக்குள்ளும் உண்டு
ஓர் இனிய நட்பு
அசையும் காட்டிலும் நட்பு
ஆடும் மரத்திலும் நட்பு
ஓடும் நதியிலும் நட்பு
ஒப்புரவாய் வாழ்பவனிடத்திலும்
நட்பு

நட்பு எனும் மூன்றெழுத்து மந்திரம்
அது சுட்டு முழங்கையை
நிறுத்திவிடும் பேராயுதம்



# என் அம்மா

அழகிய கருங்கூந்தலும்
கருங்குளத்தில்
வெள்ளை தாமரையும்
சிக்கச்சிவந்த ரோஜா நிற உதடும்
வெள்ளை பால் போன்ற
அடுக்கி வைத்த பாறைகளுடன்
அழகிய பூந்தேவதை என் அம்மா
பொன்னான வார்த்தைகளும்
கம்பீர பேச்சுக்களும்
நிலையான அனுபவமும்
ஆயிரம் வரங்களை பெற்ற
உன்னதமானவர்
மூன்றே எழுத்தில்
மிகப்பெரிய பொக்கிஷம்
என் கண்களால் பார்த்த
முதல் தெய்வம்
என் அம்மா...



எம்.எப்.மிஹ்னாஸ் சியா
தரம் 7
தி/தி/ஸாஹிரா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையை மாற்றும்போது

இறைவன் வரமாய் அளித்த
இன்னுயிரை
கறைபடிய வைத்து விடாதே மனிதா!
குறையில்லா உன்னுயிரை மாய்த்து
விடாதே
வரைந்து போவாய் மண்ணை விட்டு!

நிறைவாய் வாழ்க்கை வாழ்ந்திடவே
குடியை மறந்து விடு
போதை தலைக்கேறி - குடும்பத்தை
நடுத்தெருவில் விட்டு விடாதே



பேதைகளை நாசப்படுத்தும்
நயவஞ்சகர்களுடன் இணைந்து
விடாதே
போதை தலைக்கேறி போகும் இடம்
தெரியாமல்
பாதை மாறி சென்று விடாதே

கீதை போல உரைக்கிறேன் உனக்கு
காதை தீட்டி நன்றாக கேட்டு
நடந்து கொள்
பாதையை மாற்றுவது போதை

போதை எனும் அபாயகர
நச்சுப்பொருள் அழிந்து
இன் வாழ்வு பிறக்குதே
மனித உன் வாழ்வில்...



**சந்தியா ராம்குமார்**
தரம் 10
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்கே வெளிச்சம்

கலியுக காலமாய் இருக்கையிலே
கடவுளின் கண்ணா மூச்சாட்டம் தொடர்கையிலே
சின்னப்புள்ளியொன்றை
வைத்தான் இறைவன்
அதில் வண்ணக்கோலமிட்டான் மனிதன்

அவனது கோலமின்று அலங்கோலமானது
அவன் எண்ணக்கனவுகள் எல்லாம்
நீர் மேல் எழுத்துக்கள் போலானது...

மன்னனும் நானே மந்திரியும் நானே
என்றுரைத்த எல்லாரும்
எழுந்திருக்க முடியாமல்
தத்தம் மந்திரக்கோலை தேடுகின்றனர்...

இறைவன் கோபமும் இயற்கையின் சீற்றம்
இனிவரும் காலங்களை இலையுதிர் காலங்களாய்
மாற்றியிருக்க
அதற்குள் அகப்பட்ட மந்தைகள் கூட்டமாய்
எங்கள் மனித குலமிருக்க...

நம் மனித குல வர்க்கத்தை மீட்டுக்கொள்ள
நல்ல மேய்ப்பராய் நம் மீட்பர் வருவாரோ?
இல்லை நாங்கள் விதைத்ததில்
இது அறுவடை காலமோ?
யாருக்குத்தெரியும்
யாவும் கடவுளுக்கே வெளிச்சம்





**சன்சனா பெற்றிக் ஜெராட்**
*தரம் 10*
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி



**சிராணி ஸ்ரீஸ்கந்தராஜா**
தரம் 10
தி/மெதடிஸ்த
பெண்கள் கல்லூரி

இருளில் இருந்து வெளிச்சத்தை
நோக்கி பயணிப்பதே கல்வி

கல்வி என்பது கடல்
அதை கற்று கொடுப்பது
தொழில் அல்ல தவம்..
நம்பிக்கை கைவிட்டாலும்
நீ கற்ற கல்வி என்றும்
உன்னை கைவிடாது...

கல்வியின் நோக்கம்
வெற்றுமனதை திறந்த
நிறைந்த மனதாக்குவதே கல்வி

எப்படி கற்றுக்கொள்வது என்பது
வாழ்க்கையின் மிக முக்கியமான
திறமை...

கற்றலை நிறுத்துபவரும்
வயதானவராகி விடுவார்கள்
இருபது வயதானாலும் சரி
எண்பது வயதானாலும் சரி
கல்விக்கு வயதில்லை...

# அம்மா

அம்மா என்ற முன்றெழுத்தால் பிறந்தேன்
அன்பு என்ற மூன்றெழுத்தால் வளர்ந்தேன்
கல்வி என்ற மூன்றெழுத்தால் உயர்ந்தேன்..

வஞ்சகம் இல்லாத பேச்சும்
வாய் நிறைய மழலை சொற்களும்
மெய் சிலிர்க்க வைத்ததடி
உன் பாச போராட்டம்....

என் நண்பன் அழுகின்றான்
எழுந்து கண்ணீரை துடைக்க நினைக்கின்றேன்
நான் இறந்து வந்ததைதையும் மறந்து....

நண்பனை நம்பினேன்
நடுத்தெருவில் நின்றேன்
கடவுளை நம்பினேன்
கஷ்டப்பட்டுநின்றேன்
கல்வியை நம்பினேன்
கண்ணுக்கு எட்டாத தூரத்திற்கு சென்றேன்..



**மகேந்திரன் ஹிதுர்சனா**
தி/செல்வநாயகபுரம் இந்து மகா
வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் தடுப்பு

நிரந்தரமான வாழ்க்கையை
சுதந்திரமாக வாழும்
ஒவ்வொரு நொடியும்
அனுபவிக்கும் இளைஞர்களே!
இன்பமான வாழ்க்கையை - அனுபவித்து
வாழும் இந்த வயதினிலே!



போதைப்பொருள் என்ற பெயரில்
நரகத்தில் வாழ்கின்றீர்களே!
நரகத்திற்குள் சென்றால் மீண்டும்
வெளியே வர முடியுமா?

போராட்டம் நிறைந்த வாழ்க்கையில்
வேதனையை அனுபவிக்கும் இளைஞர்களே!
ஆபத்து என்று தெரிந்தும் கூட
அதற்குள் புகுந்து விட்டீர்களே!

**மந்தூரி யோகநாதன்**
தரம் 10
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

போதைப்பொருளை பாவிப்பதால்
பேதையாய் நிற்கிறீர்கள்...
போதைப்பொருளை ஒழிப்போம்
போதுமான அளவு சந்தோசமாய் வாழ்வோம்

---

## தாய்

உயிர் வாழ காற்றாக இருப்பவரே தாய்
பார்ப்பதற்கு கண் தாய்
நாம் வாழ
வலி சுமந்த தெய்வம் தாய்
நமது நலம் நினைத்து
தன்னை உருக்கினாள் தாய்
கடவுள் எமக்கு தந்த பரிசுகளில்
சிறந்தது தாய்
மறு ஜென்மம் ஒன்றிருந்தால்
இதய துடிப்பாக மாறி அவரை வாழ வைப்பேன்





**செலின்டன் அஸ்ரொப் கிறிஸ்டினா**
தரம் 09.
தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசான்

புத்தக மூடை தனை
முதுகில் சுமந்து நிதம்
கல்வி கற்க செல்லும்
சின்னஞ் சிறிய மழலைகளாய்

பள்ளிப்பாலகர் நாம்
பகிரும் மொழி கேளீர்..
வெள்ளை உள்ளம் கொண்ட
என் அன்பின் ஆசானே...



பள்ளிப்பாடமதில்
புள்ளிகள் குறைந்து
விட்டாலும்...
பள்ளி ஆசான்களின்
பாசம் குறைவதில்லை

அள்ளி அணைத்து விடும்
அம்மா அவர் கூட...
புள்ளி குறைந்து விடில்
புறுபுறுப்பு குறையாது

ஆசானின் உழைப்பிற்காய்
அனைத்து பாடத்திலும் நல்ல
சித்தி பெற்று - என்
ஆசானின் மனதை மகிழ
வைப்பேன்...!

ஆசான் என்பவன்
என் தாய்க்கும் மேலானவள்
அவரை மதித்து...
என் வாழ்வை வளம்
பெறச்செய்வோம்...!

**சஹானா ஜபநேசன்**
தரம் 10
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி

# தாய்



**சதுர்ஷிகா வேலுமணி**
தரம் 09
தி/செல்வநாயகபுரம் இந்து
மகா வித்தியாலயம்

தன் உதிரத்தை பாலாக்கி
உடலை பாதுகாப்பாக்கி
தன் உயிராலே
உயிர் கொடுத்தவளே

நான் வயிற்றினுள்
இருக்கும் போது
என்னை படைத்த கடவுள் நீ
நான் வெளியே வந்த போது
என்னை காதல் செய்த
காதலியும் நீயே

வீட்டினுள் எத்தனையோ
அறைகள் இருக்கலாம்
ஆனால் தாயினுள்
என்னை கருவாக்கிய அறை
உன் கருவறையே



உனக்கு கவிதை எழுதி
தீர்ந்தது வார்த்தைகள் அல்ல
என் காகிதத்தாளும்
எழுதுகோலும்...
நான் முதன் முதலில் கேட்ட
குரலும் உன்னுடையது.
நான் முதன் முதலில் பார்த்த
முகமும் உன்னுடையது.

உலகில் பணம் கொடுத்து
வாங்க முடியாத
ஒரே உறவு
எனது தாயின் உறவு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதையே நீ போ

அந்நியர் காலத்தில் ஆரம்பித்து
அதிவிரைவாய் ஆண்டாண்டு காலமாய் எமை
அடிமை செய்து - எமை
மண்டியிடச்செய்து
போதை...
யாரறிவார் இந்த மாயவளை பற்றி...?

பள்ளி செல்லும் பாலர் தொட்டு
இளைஞர் யுவதி என்று
பாரபட்சமின்றி,
படையெடுத்து நிற்கிறது
போதை...
சிதைந்து போய் நிற்கும் சிறார்களின் பெற்றார் தம்
அழுகுறலோசை கேட்கிறதா?

சாதனை பல படைத்து சரித்திரத்தில் இடம்பெற
மண்ணுலகு கண்ட மனிதகுலமின்று சாவை நோக்கி
சகலமும் தொலைத்து மடிந்து போக கண்டோமே!
தனை அழிக்க வந்த கொடிய அசுரனென்று அறியாது
அரக்கனோடு நட்பு கொள்ள கண்டோமே...

போதையை ஒழிக்க வழியின்றி தவிக்கும்
அப்பாவி உள்ளங்களுக்கு தயவு காட்ட முன்வர
மனம் கொள்வோம்!
அகந்தை மிக்க அசுரனாம்
அவனின் அழிவை நிச்சயிக்க
அவதாரம் கொள்வோம் - கண்டது போதும் எதிர்த்து
நில் மானிடா!
உனக்காக அல்ல உன் அடுத்த சந்ததிக்காய்!




**லத்திகா ஜெயபாலன்**
தரம் 12 விஞ்ஞான பிரிவு
தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை..



மனதில் பல துன்பங்கள்
இருந்தாலும் இனிய
சாரலோடு மழையில்
நனையும் போது
துன்பங்கள் கூட
சந்தோசமாக
மாறி வருகிறது.

பொழியும் மழைத்துளிகளுக்கு
தெரிவதில்லை
பல உயிர்களின் தாகத்தை
தீர்க்கத்தான் சென்று கொண்டு
இருக்கிறோம் என்று..

தங்கள் வீடுகளை இழந்து
அகதிகளாக அலையும்..
பறவைகளுக்கு தான்
புரியும் மரங்களின் அருமை

தினமும் இரவு வந்தால்
கறுப்பு நிற உடையை
அணிந்து கொள்கிறது பகல்

சில நொடிப்பொழுது
வாழ்ந்தாலும் தானும்
குதூகலமாகவும் தன்னை
ரசிப்பவர்களையும்
பரவசமாக்கும் பனித்துளி

இயற்கையின் ரகசியம்
தினமும் வெளியுலகிற்கு
தெரியாமல் மூடி
மறைக்கின்றது இரவு

யாரைத்தேடி அலைகின்றது
என்று தெரியவில்லை
நிலா இரவு முழுவதும்
அலைந்து கொண்டே
இருக்கின்றது இந்த நிலா..!

வானத்தில் இருந்து வரும்
மழைத்துளி மண்ணை
நனைக்கும் முன் பல
விவசாயிகளின் மனதை
நனைத்து விடுகிறது

ஏழையின் சிரிப்பில்
இறைவன் இருக்கின்றான்
என்பார்கள் ஆனால்
தரிசிக்க தான் இவ்வுலகில்
யாரும் இல்லை..!

மலையின் உச்சியில்
இருந்து விழுந்தாலும் எனக்கு
மரணமில்லை
இப்படிக்கு நீர்வீழ்ச்சி

**பி.தீப்திகா**
தரம் 12 கலைப்பிரிவு
தி/நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழிக்காக..

உயிர்த்தோழியே,
தொலைவில் இருந்தாலும் தொலைந்த போதுவது
நம் நட்பும்
உறவுகள் பல வரினும் எனை மறவாத உன் நேசமும்
நிறம், தரம் பாராமல் நீ காட்டும் பாசம் நிலைமாறுமா?

நீ பிரிந்த நொடியை எண்ண என் மனம் வலிக்கிறது.
நீ என்னுடன் இருந்த நொடிகளை எண்ண மனம் மகிழ்கிறது.
நீ என்னுடன் இருந்தாலும்
எனை நீங்கிச்சென்றாலும் என்னுடனே வாழ்கிறாய்...

என் அன்பின் உறைவிடம்
நீ என்பேன்
என்னவோ உன் வருகையை சூரிய உதயத்திற்கு ஒப்பிடுகிறேன்.
சூரிய ஒளிப்பட்டால் மலரும் சூரியகாந்தி போல
உன் வருகை கண்டு என் மனம் மலர்கிறது.

எத்தனை உறவுகளின் அன்பு அதிகமாக கிடைப்பினும்
நான் அளவுக்கதிகமாக ஏங்குவது உன் அன்புக்காக மட்டுமே....

பி.டிதுர்சி
தரம் 09
தி/செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு வானம்



க. மதுஷா
தரம் - 09
செல்வநாயகபுரம் இந்து
மகா வித்தியாலயம்

இரவோ தனி வசிகரம்
இதை இரசிப்பவர்களோ விசித்திரம்
அழகே இரவின் சுவாரசியம்
அதன் நிறமோ வர்ணமயம்

அழகின் அதிசயம் என்னவோ?
இந்த இரவின் வசிகரம் என்னவோ?
கவர்ச்சி இரவின் இரசியம்
என்னவோ?
இதை இரசிக்கும் மனங்களின்
ஆசை என்னவோ?

பால் வளிந்தோடும் நிலவு
தனி அழகு
அதை ஆவலோடு விழுங்க
நினைக்கும் இரசிகர்களின் ஆசை
தனி அழகு
மௌனத்தில் சிரிக்கும் விண்மீன்கள்
தனி அழகு
கண்ணிமையை போல் கறுமேகம்
தனி அழகு...

இரவு கனவு காணும் சொர்க்கம்
அதன் நிலவு எழில் கொஞ்சும்
அழுகு
இரவின் அழகுக்கு ஈடு
கொடுக்காத படைப்பு இது
இரசனை உள்ளங்களின்
கவர்ச்சியே இது

அழிக்கவும் முடியாத அழகு
எம்மால் அமைக்கவும் முடியாத
அழகு
வெறுக்கவும் முடியாத அழகு
எம்மால் வெறுமையாய் ஆக்கவும்
முடியாத அழகு

இரவின் அழகை இரசிக்கவும்
நிலவின் நிழலை இரசிக்கவும்
மீனினங்களின் வெக்கத்தை
இரசிக்கவும்
எமது கண்ணுக்கு மெருகூட்டும்
அழகே இரவு வானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



## மூத்த கவிஞர் தாமரைத்தீவான்

நேர்கண்டவர் - அரசரெத்தினம் அச்சுதன்

01. எழுபது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தும் எழுத்துலகில் இயங்கி வரும் தாங்கள், தற்கால இலக்கியப்போக்குகளால் சலிப்படைகிறீர்களா...?
சலிப்பில்லை, வருத்தமுண்டு - கலப்பினால் தேய்ந்த நிலையில் உள்ளதே என்று.

02. ஈழத்தின் கவிதைப்போக்கு எப்படி இருக்கின்றது..?
ஆமை விசையில் போய்க்கொண்டிருப்பதாய் தெரிகிறது.

03 ஈழத்து இலக்கிய பரப்பில் திருகோணமலை மாவட்டத்தின் நிலை எவ்வாறு உள்ளது..?
யாழ், மட்டு, மலையகங்களை விட மந்த நிலையில் உள்ளதாய் தெரிகிறது.

04. புதுக்கவிதையின் போக்கு இன்று மரபுக்கவிதையின் வளர்ச்சியை பாதித்துள்ளதா..?
மரபு மரபுதான். புதிது புதிது தான் எதுவும் பாதிப்பில்லை.

05. புதுக்கவிதையின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது?
தொடக்கத்தில் குதிரை விசையில் போனது. இப்போது ஆமை விசையில் போகிறது.

06. உங்களால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்கள்..?

01. பிள்ளை மொழி - 1992
02. கீறல்கள் - 1992
03. கட்டுரைப்பத்து - 1997
04. போரும் பெயர்வும் - 1999
05. ஐம்பாலைம்பது - 2001
06. வள்ளுவம் அந்தாதி - 2002
07. முப்பத்திரண்டு - 2004
08. சிறு விருந்து - 2004
09. சோமம் - 2005
10. என்பாநூறு - 2005
11. ஐந்தொகை - 2002
12. இணைப்பு - 2005
13. போர் நாற்பது - 2006
14. நீத்தார் பெருமை - 2008
15. அன்பழைப்பு - 2009
16. பத்துப்பத்து - 2009
17. மொழிநூறு - 2010
18. சீட்டுப்பத்து - 2010
19. வில்லுப்பாட்டு - 2010
20. மும்மறை - 2010
21. த.இ.வீழ்ச்சிக்கும்மி - 2010
22. இ.அ.சிறுவர்பாடல் - 2010
23. சுதந்திரன் கவிதை - 2011
24. கற்றதும் பெற்றதும் - 2012
25. புறப்பாடல் - 1 - 2013
26. புறப்பாடல் - 1 - 2014
27. நினைவில் நிற்பவை - 2016
28. பொன்னகம் மீட்போம் - 2016
29. முரசுப்பா - 2016
30. ஈற்றுப்பா - 2019
31. எட்டடியார் - 2016
32. நால்மொழி - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. நுணிக்கொம்பர் - 2017
34. சின்னப்பா - 2017
35. நறும்பா - 2017
36. தமிழமுதம் - 2018
37. சிற்றிலக்கியம் - 2018
38. இதழ்ப்பா - 2018
39. கடையேடு - 2018
40. அரும்பா - 2018
41. பாத்துளி - 2018
42. ஆறேழு - 2010
43. குறுமைப்பா - 2019
44. பூவாடை - 2019
45. சொரியல் - 2019
46. நல்வரவு - 2019
47. சில்லறை - 2019
48. ப∴றுளி - 2019
49. அடுக்கம் - 2019
50. பா(க்)கள் - 2019
51. உவகை - 2019
52. பாவாரம் - 2020
53. முன்மொழி - 2020
54. தீந்தமிழ் - 2020
55. பாக்கூட்டு - 2020
56. பாக்குப்பை - 2020
57. ஊர்ப்பா - 2020
58. உச்சம் - 2020
59. ஒன்றுதான் - 2020
60. முருகியம் - 2020
61. வரட்சி - 2021
62. இன்பா - 2020
63. நம்பா - 2021
64. ஆக்கற்கலை - 2021
65. நீக்கம் - 2021
66. ஏக்கம் - 2021
67. அண்ணன் - 2021
68. எழிலி - 2021
69. ஏற்பாடு - 2021
70. இணர் - 2021
71. உள்ளல் - 2022
72. ஊறல் - 2022
73. கடைக்கண் - 2022
74. தாளாண்மை - 2022
75. முறுவல் - 2022
76. செம்புலம் - 2022
77. புதிய பத்துப்பாட்டு - 2022
78. கூதிர் - 2023
79. மட்டு - 2023

07. உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி...?

கீறல்கள் - 1992
ஆளுநர் - 2001
கலாபூஷணம் - 2005
குறளமுதம் - 1994
வெரித்தாஸ் - 2021
பொன் மீட்போம் - 2017
கொழும்பு தமிழ்ச்சங்கம் - 2017

08. இளந்தலைமுறை கவிஞர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை?
கடந்த நாட் பாவலர் பாக்களை பார்த்துவிட்டு எழுதமுனைமின்

09. கவிதை இலக்கியத்துறையில் நீங்கள் சந்தித்த மறக்க முடியாத சம்பவம் ஏதும் உண்டா ?.
இந்துவில் பாச்சொன்ன போதில் படப்பிடிப்பாளர் பாச்சுவையால் மறந்து பின்னரே படம்பிடித்தார்... போதாதா...?

10. உங்களை பற்றிய சிறு அறிமுகம் ?
1932 இல் பிறப்பு, மூதூர் அந்தோனியாரில் கல்வி, மட்டக்களப்பில் ஆரம்ப பயிற்சி 1952 இல், கற்பித்தல் பதுளையில் 1955 இல், 1987 இல் ஓய்வு, 1972 - 1978 கவியரங்குகள் மூதூர் எங்கும், பல இதழுக்கும் பா வரைதல், 39 நூல் அச்சேற்றம், 39 நூல் இருப்பில் உண்டு. இப்போது அகவை 91 ஆல் தளர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்கேசரி விருது 2023

## சிவநாமம் ஜெயராசா

கலை உலகின் மிக முக்கிய கதாபாத்திரமான கலைஞர் சிவநாமம் ஜெயராசா சிறுவயதிலேயே கலை உலகில் தடம் பதித்தவர். தனது சிறிய தகப்பனாரான நாகமுத்து அருமைலிங்கத்துடன் எட்டு வயதிலேயே அன்புச்சுடர் எனும் நாடகத்தில் மேடையேறியவர். யாழ்ப்பாணம் அரியாலை ஸ்ரீ கலைமகள் முத்தமிழ் மன்றத்தில் மேடையேற்றப்பட்ட நாடகத்தில் நீதிமன்ற குமாஸ்தாவாக மேடையேறினார்.

சிறுவயதில் ஏற்பட்ட நாடகத்தாகத்தினால் அரியாலை ஆனந்தா வித்தியாசாலையில் தரம் 5 இல் கல்வி கற்கும் பொழுது வகுப்பாசிரியரின் வேண்டுகோளுக்கு இணங்கி கதை,வசனம் எழுதி அசோகன் எனும் நாடகத்தை மேடையேற்றி அசோகன் எனும் பாத்திரத்திலும் நடித்திருந்தார்.

அதனையடுத்து, கனகரட்ணம் வீதியிலுள்ள மைதானத்தில் செல்வதாஸ் ஆசிரியர் மேடையேற்றிய "இரத்தினபுரி இளவரசன்" எனும் நாடகத்தில் தனது 15 வயதில் முதன்முதலில் கதாநாயகனாக மேடையேறினார். அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது நாடகத்திலும் மேடையேறினார். 19 வது வயதில் "நெஞ்சம் மறக்குமா" என்ற நாடகத்தில் தந்தையாக குணச்சித்திர பாத்திரத்தில் நடித்திருந்தார்.

21 வயதில், அந்தக்கால சமூக நிலைமைகளை விளக்கி "தனிமரம்" என்ற சமூக நாடகத்தினை அல்வாய் யோகராஜாவின் கதை வசனத்தில் இயக்கி மேடையேற்றியதோடு வில்லன் பாத்திரத்திலும் நடித்திருந்தார்.

தான் வாழ்ந்த காலத்தில் கடமையே கண்ணாகக்கொண்டு வாழ்ந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரின் குடும்பத்திற்கு நிகழ்ந்த கதையை மையமாகக்கொண்டு புனையப்பட்ட "தனிமரம்" எனும் நாடகத்தில் நடித்திருந்தார்.

அத்துடன் தனிப்பட்ட வாழ்வனுபவத்தில் நிகழ்ந்த சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு "தங்கைக்காக" எனும் நாடகத்தினை தயாரித்து மேடையேற்றிருந்தார்.

அதனைத்தொடர்ந்து, "சகோதர விரோதி", "நாகநாட்டு இளவரசி" ஆகிய சரித்திர நாடகங்களிலும் "அலாவுதீன்", "பாமா விஷயம்", "சத்தியவான் சாவித்திரி" ஆகிய நாடகங்களில் நடித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் திருமணம் முடித்த கலைஞர் சிவநாமம் ஜெயராசா திருகோணமலைக்கு இடம்பெயர்ந்திருந்தும் தனது கலைப்பணியை தொடர்ந்தார்.

1977 ஆம் ஆண்டு மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில் "ஆணவக்காரி" என்ற சமூக சீர்திருத்த முழு நீள நகைச்சுவை நாடகத்தினை தயாரித்து மேடையேற்றினார்.

இந்நாடகத்திற்காக கலைஞர் சிவநாமம் ஜெயராசா பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தர், நகரசபை உறுப்பினர் செல்வா சரஸ்வதிநாதன் ஆகியவர்களால் "பொற்கிழி" வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற "மௌனராகம்" நாடகத்திலும் நடித்திருந்தார்.

அதனையடுத்து அன்புவழிபுரம் கிராமசேவையாளர் அருந்தவச்செல்வம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற நாடகத்தில் மூன்று பாத்திரத்தினை ஏற்று தனிநடிப்பாக அரங்காற்றினார்.

இதனைவிட சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். அன்புவழிபுரம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் முன்னாள் இணைச்செயலாளராகவும், தற்போது போசகராகவும், கலைமகள் வித்தியாலத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் முன்னாள் செயலாளராகவும், உறுப்பினராகவும், அன்புவழிபுரம் கிராம அபிவித்திச்சங்கத்தின் முன்னாள் உபசெயலாளராகவும், உறுப்பினராகவும் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் சேவைகளை பாராட்டி வாசல் வாசகர் வட்டம் கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.

**- சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன்**

வாசல் கவிதை இதழ் புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்தவுள்ளது. முதன்முதலில் எமது கவிதை இதழில் கவிதை எழுதும் கவிஞர்களின் கவிதையை களம் பகுதியில் பிரசுரித்து அவர்கள் தொடர்பான முழுமையான விபரங்களை "கவிஞர் அறிமுகம்" எனும் பகுதியில் பிரசுரிக்கவுள்ளோம்.

எனவே புதிய கவிஞர்கள் தாம் முதன்முதலில் எழுதிய கவிதை என்பதை உறுதிப்படுத்தி பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் தம்மை பற்றிய விபரங்களுடன் ச.திருச்செந்தூரன், பிரதம ஆசிரியர், வாசல் வாசகர் வட்டம், 691/C, அன்புவழிபுரம், திருகோணமலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக்கேசரி விருது 2023

## நந்தவனம் சந்திரசேகரன்

தமிழ்நாட்டின் இலக்கிய ஆளுமைகளில் ஒருவராக திகழும் நந்தவனம் சந்திரசேகரன் இலங்கை வவுனியாவை பிறப்பிடமாக கொண்டவர் இவர் 1981 ஆண்டும் தனது 11 வயதில் குடும்பத்தாருடன் இந்தியாவுக்கு தமிழ்நாட்டிற்கு புலம்பெயர்ந்தார்.

பள்ளிப்பருவத்திலேயே இவருடைய தமிழாசிரியர் புலவர் தியாக சாந்தன் அவர்களின் வழிகாட்டலில் இலக்கியப் பயணத்தை தொடங்கியவர்

கடந்த 26 ஆண்டுகளாக இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார்.

தமிழ்நாடு மட்டுமல்லாமல் புலம்பெயர்ந்த உலகத்தமிழர்களிடத்திலும் இனிய நந்தவனத்தை கொண்டு சேர்த்துள்ளார்.

இனிய நந்தவனம் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறப்பு மலராக வெளிவருகிறது தமிழ்நாட்டில் பல மாவட்ட சிறப்பு மலர்களை வெளியிட்டுள்ளதோடு சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, துபாய், ஆப்பிரிக்கா, இலங்கை போன்ற நாடுகள் பற்றிய சிறப்பு மலர்களும் வெளிவந்துள்ளன.

இவர் ஒரு பத்திரிகையாளராக மட்டுமல்லாமல் சிறந்த எழுத்தாளராகவும் கவிஞராகவும் இருந்து பல நூல்களையும் எழுதியுள்ளார் 5 கவிதை நூல்கள், 7 கட்டுரை நூல்கள், 3 பயணக்கட்டுரை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

இனிய நந்தவனம் பதிப்பகத்தில் மூலம் பல எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டு அதற்கான வெளியீட்டு விழாக்களையும் நடத்தி வருகிறார்.

இவருடைய இலக்கிய பணியை பாராட்டி முப்பதிற்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடந்த இனிய நந்தவனம் வெள்ளி விழா மலர் அறிமுக விழாவில் இவருக்கு "மொழிக்காவலர்" விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இலக்கியத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் நந்தவனம் சந்திரசேகரனின் சேவையை பாராட்டி கலைக்கேசரி விருது வழங்கி கௌரவிப்பதில் வாசல் வாசகர் வட்டம் பெருமையடைகிறது.

**– சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரிடமிருந்து...

இலக்கியம் என்பது சமூகத்தின் அடையாளம் ஊடகம் என்பது ஜனநாயகத்தின் குரல் இரண்டும் உலக நாடுகளில் வரலாற்று ரீதியான பதிவுளை அடையாளங்களை இலக்கிய வாதிகளுக்கு ஊடகவியலாளர்களுக்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் கவிதை சிற்றிதழ்கள் காலத்திற்கு காலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மூதூர் முகைதீனின் “ஓசை” எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தின் “நீங்களும் எழுதலாம்” கட்டைபறிச்சானிலிருந்து பு.ஜெயாகரனின் “பொலி” என்பன பல கவிஞர்களை வெளி உலகிற்கு வெளிப்படுத்தியிருக்கின்றது.

வாசல் கவிதை இதழ் இன்று வெளிவருவதற்கு கண்களாய் நின்று சுழன்றவர் ஆசிரியர் ச.திருச்செந்தூரன், “வாசல்” கவிதை இதழ் உருவாக்கம் பற்றிய ஆலோசனைகளை மட்டுமே நான் வழங்கியிருந்தேன்.

காலத்தின் கண்ணாடியாய் திகழ்கின்ற இலக்கிய படைப்புக்களில் கவிதைக்கும் தனித்துவமான அடையாளம் இந்த வாசல் கவிதை இதழ் அதன் முகம், அதன் பார்வை, அதன் அடையாளம் பற்றி காலம் தான் தீர்மானிக்கும்.

**அ.அச்சுதன்**
(ஊடகவியலாளர்)
தலைவர், வாசல் வாசகர் வட்டம்
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரிடமிருந்து...

வாசல் வாசகர் வட்டத்தையும், கவிதை இதழையும் நீண்ட கலந்துரையாடலின் பின்னரே ஆரம்பிக்க திட்டமிட்டோம்.

அரசியல் முகாம்கள் போன்று இலக்கியவாதிகளும் பல்வேறு குழுக்களாக பிரிந்து செயற்படுகின்ற இக்காலகட்டத்தில் மூடிய அறைக்குள் பத்து தொடக்கம் பதினைந்து நபர்களுடன் புத்தக வெளியீடுகளையும், இலக்கிய சந்திப்புக்களையும் நடாத்தினால் போதும் என்ற மனநிலை தோன்றியுள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டு, மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை தாக்கம் செலுத்தும் வடிவமான கவிதை என்ற வடிவத்தை அடியாகக்கொண்டு கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தினை எவ்விதத்திலும் கேள்விக்குள்ளாத வகையில் வெவ்வேறுபட்ட கருத்துடையவர்களையும் ஒரு வாசலுக்கு கொண்டுவரும் சிந்தனையின் பாற்பட்டு “வாசல்” கவிதை இதழும், “வாசல்” வாசகர் வட்டமும் இயங்க ஆரம்பித்துள்ளது. வாசலின் இயங்கியலும், ஏற்படுத்தும் தாக்கமும் குறித்து காலமும், இயற்கையும் நெறிப்படுத்தட்டும்....

**ச.திருச்செந்தூரன்**

செயலாளர் - வாசல் வாசகர் வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசல் வாசகர் வட்டத்தின் கலைக்கேசரி விருது - 2023



செல்லர் சிவநாமம் ஜெயராசா



நந்தவனம் சந்திரசேகரன்

## சந்தா விபரம்

தனி இதழ் : ரூபா. 280.00
ஆண்டு சந்தா : ரூபா. 1300.00
(தபால் செலவு உட்பட)

வங்கி கணக்கு இலக்கம் :
75041069 - இலங்கை வங்கி
திருகோணமலை.

உங்களுடைய படைப்புக்களையும்,
விமர்சனங்களையும்
வாசல் ஆவலோடு எதிர்பார்க்கிறது.

# வாசல்

கவிதைக்கான காலாண்டு இதழ்

பிரதம ஆசிரியர் : ச. திருச்செந்தூரன்
நிர்வாகம் : வாசல் வாசகர் வட்டம்

முகவரி :
691/C, அன்புவழிபுரம், திருகோணமலை.
தொலைபேசி :
076 7687107, 077 8918096
மின்னஞ்சல் :
vaasalvaasagar@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org